# நம்நாட்டுப் பெண்மணிகள்

**புத்தகம் 1**

## பார்வதிபாய் அம்மையார்

(உழைப்பில் சிறந்தவர்)

சென்னை முத்தியாலுபேட்டை
உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்,
***மயிலை, சிவ. முத்துக்குமாரசாமி முதலியார்***
எழுதியது

**எஸ். வாஸன் கம்பெனி,**
சமுக்ரங்கபுரம் : : திருநெல்வேலி ஜில்லா,
மயிலாப்பூர் : : மதராஸ்

ரிஜிஸ்தர் செய்தது] 1949 [விலை அணா 6

# பெரியார் கார்வே அவர்கள் பொறித்து விடுத்த

# பொன்மொழிகளின்

மொழி பெயர்ப்பு

---

" என் வாழ்க்கைவரலாற்றினைப் படிக்கும் இளை-ஞர்களுக்கு நான் கூற விரும்பும் நல்லுரைகள் இவை-தாம்: முதற்கண், சிறந்த ஒழுக்கத்திற் பயில்வீராக; இரண்டாவதாக, நீங்கள் வசிக்கும் நாட்டுக்கு நல்ல-வர்களென்று எண்ணப்படுவதற்குரிய தகுதிகளைப் பெறுவீராக; மூன்றாவதாக, பெற்றோருக்கோ மற்-றோருக்கோ சுமையாய் இராமல் உரியகாலத்தில் உங்கள் வாழ்க்கைக்கான ஆதாரத்தைத் தேடிக்கொள்வீராக. இந்தியத்தாய் அடிமைத்தளையிலும் வறுமையிலும் அறியாமையிலும் அமிழ்ந்துகிடக்கின்றாள். உங்கள் வாழ்க்கைக் குரிய ஆதாரத்தைத் தேடிக்கொள்வதற்-காக நீங்கள் தெரிந்தெடுத்திருக்குந் துறையிலாகிலும் வேறு உங்கட்கு விருப்பமான எத்துறையிலாகிலும் தொண்டுசெய்து, சிறிது நேரத்தையும் முயற்சியையும் பணத்தையும் செலவிட்டு அவளைக் கைகொடுத்துத் தூக்குவதற்கு முயல்வீராக."

பெரியார் தொண்டு கேசவ கார்வே

பன்னூறாண்டு பாரினில் வாழ்க.

---

Sri Saraswathi Vilasam Press, Alwarpet, Madras-18

# முன்னுரை

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' 'எண்ணிய எண்ணியாங் கெய்துவர்.' ஆதலின், மாணாக்கர்களே, நீங்கள் எத்தகைய ஏழ்மைநிலையில் இருந்தாலும், முன்னேற்றம் உறுதற்குரிய தகுதிகள் ஒரு சிறிதும் வாய்க்கப்பெறாமல் இருந்தாலும் கவலையுற்றுக் கலங்குதல் வேண்டா. திண்ணிய உடற்கட்டு, தெள்ளிய நுண்ணறிவு, செட்டுருப்போடும் வன்மை ஆகிய இவற்றுள் ஒன்றேனும் அமையப்பெறுதிருப்பினும் நீங்கள் உங்கள் வாழ்க்கையில் மேன்மையுற்றுத் திகழ வழி உண்டு. ஆனால், உறுதிவாய்ந்த உள்ளமும் உலையா முயற்சியும் வேண்டும்.

கல்வி ஒருவர்பங்கன்று. பெரும் புகழும் பெற்றுச் சிறத்தலும் ஒருசிலர்க்கே உரியதன்று. அவைகளைத் தம் இடையருமுயற்சியாலும் உள்ளங்கலங்கா உழைப்பினாலும் எய்தி இன்புற்றோர் பலர்.

நீங்கள் பெற விழைவனவற்றுள் ஒருசில அன்றைக்கே கைகூடும். வேறுசில கைகூட நாட்கள் நீடும். ஆண்டுகள் பல செல்லினும் கைகூடாதனவும் உண்டு. நீங்கள் அதன்பொருட்டு உழைப்பில் சோர்வோ, உள்ளச் சோர்வோ கொள்ளுதல் கூடாது.

உங்கள் நிலைமை அறிந்து, நீங்கள் அடைய விழையும் பொருளின் தன்மை உணர்ந்து, காலமும் இடமும் தெரிந்து, பொறுமையோடு முயலின் யாதும் எளிதில் கிடைக்கும்.

ஆதலால், மாணாக்கர்களே, பெரியோர் பலரின் வாழ்க்கைநிகழ்ச்சிகளைப் படித்து, அவர்தம் வாழ்க்கையில் காணும் குணநலன்களை ஆய்ந்து உணர்ந்து, அவைகளை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இந்த நோக்கத்தோடு உழைப்பால் உயர்வுற்ற பார்வதிபாய் அம்மையார் வரலாறு இங்கே தரப்படுகின்றது. இவர்தம் வாழ்க்கைநிகழ்ச்சிகளில் பொதிந்துள்ள உண்மைகள் பெண்டிர்க்குமட்டும் அன்று; ஆடவர்கட்கும் பெரிதும் பயன்படுவன. இவற்றுட் பலவற்றை நீங்கள் கற்கும் பருவத்திலேயே மேற்கொள்ளலாம்; அவை உங்கள் பிற்காலவாழ்க்கைக்கு உறுதுணையாய் நிற்கும்.

இந்நூலின் பொருட்டு யான் வேண்டிக்கொண்ட சில செய்திகளை அன்புடன் தெரிவித்து உதவிய 1. பம்பாய், இந்திய ஊழியர் கழகம் (Servants of India Society), 2. புனா, இந்துக்கள் கைம்பெண் இல்லம், 3. எஸ். என். டி. டி. இந்தியப் பெண்கள் பல்கலைக்கழகம், இவற்றிற்கும், அறிஞர்கள் 1. B. D. கார்வே, B. Sc, B. T., M. Ed., 2. பார்வதிபாய் அம்மையார் புதல்வர், N. M. அதவலே, M A., 3. N. V. பதங்கர், (Patankar) M.A., B.T., M Ed. இவர்களுக்கும், நம் இளைஞர்களுக்கு அன்புடன் அறிவுரை வழங்கியருளிய பெரியார் டாக்டர் D. K. கார்வே, B. A., D. Litt. அவர்கட்கும் என்றும் நன்றியறிதலுடையேன்.

5 நவம்பர் 1945

மயிலை, சிவ முத்து.



# பார்வதிபாய் அதவலே

## தொடக்கம்

திருவும் திறலும் உடையவரே உயர்வடைவர் என்பதில்லை. ஊக்கமும் உழைப்பும் உடையவரும் உயர்நிலை பெறுவர் என்பதைப் பார்வதிபாய்அம்மையார் வரலாற்றால் நீங்கள் அறியலாம். கல்வியில் பெரிதும் பிற்போக்கில் உள்ள மாதுக்கர்களும் நம் அம்மையார்சரிதத்தால் நல்லுணர்ச்சி யுற்று முற்போக்கில் விளங்குவர்.

பார்வதிபாய் அம்மையார் நாட்டுப்புறத்தில் பிறந்து வளர்ந்த ஓர் எளிய பெண். இவர் இருபத்தைந்து வயசுவரை எழுதப் படிக்க அறியாதிருந்தவர். உழைப்பைத் தவிர வேறு எத்தகைய நலனும் இவருக்கு இருந்ததாகத் தெரியவில்லை. இவ்வம்மையார் அந்த உழைப்பினாலேயே ஊக்கமும் உற்சாகம் கண்டார்; கற்கும் பருவம் கடந்த பின்னர்க் கல்வி கற்கத் தொடங்கினர்; மேல்நாடுகளுக்கும் சென்றார்; உயரிய பட்டம் பதவிகள் பெறாவிடினும் அறியவேண்டுவன பலவும் அறிந்தார்; புத்தம்புதிய உணர்ச்சிகளைப் பெற்றார்; பொதுநலப் பணிகள் புரிந்தார். இவரால் பல இளங்கைம்பெண்கள் முன்னேற்றம் உற்றனர்.

நம் பார்வதி அம்மையார்சரிதத்தோடு மற்றுமொரு பெரியார்சரிதமும் தொடர்புண்டு நிகழும். பெண்களின்

முன்னேற்றங்கருதி உழைத்தவர்களுள் அப் பெரியார் தலைசிறந்தவர்; நம் அம்மையாரின் நல்வாழ்வுக்கு வழிகோலியவர்; அவ்வப்போது அவர்க்கு ஊக்கமும் உணர்ச்சியும் உண்டாக்கினவர்; அவரே டி. கே. சார்வே என்னும் பெரியார். அப் பெரியாரின் வரலாற்றிலும் பல சீரிய உண்மைகளை அறியலாம்; நீங்கள் முன்னேற்றம் உறலாம்.

இவ் விருவர்தம் சரிதைகளும் இயைந்து திகழும் இவ் வரலாறு ஆடவர் மகளிர் ஆகிய இருபாலாருக்கும் இன்றியமையாதது; உயர் குணங்களை உதவுந் தகைமையது; படிக்கப் படிக்கப் பெரிதும் நலந்தருவது.

பெரியார் கார்வே அவர்களும், பெருமாட்டி பார்வதிபாயும் இன்றும் நன்னிலையில் வாழ்ந்துகொண்டு தம்மால் இயன்ற பொதுநலத்தொண்டுகளைப் புரிந்து வருகின்றனர்.

## அம்மையார் பிறப்புவளர்ப்பும் அவர்தம் மனையறவாழ்க்கையும்

பம்பாய்மாகாணத்தில், கொங்கணநாட்டின் தென் பகுதியில் உள்ள இரத்தினகிரிஜில்லாவில் தேவ்ருக் என்னும் ஒரு சிற்றூர் உளது. அந்த ஊரில் 1870-ஆம் ஆண்டில் நம் பார்வதி அம்மையார் பிறந்தார். அவர்தம் தந்தையார்பெயர் பாலகிருஷ்ண ஜோஷி என்பது. அவருக்குக் குழந்தைகள் பதினொருவர். அவருள் அறுவர் இளமையிலேயே இறந்துபட்டனர். மற்ற ஐவருள் மகளிர் மூவர். ஆடவர் இருவர். ஆடவர் நரஹரி, வாமனன் என்னும் பெயரினர்; மகளிர் யசோதாபாய், ஆனந்திபாய், பார்வதிபாய் என்னும் பெயரினர்.

பாலகிருஷ்ண ஜோஷி மகாராட்டிர அந்தணர்குலத்தைச் சார்ந்தவர். அவர் உழவுத்தொழிலினையே தம் வாழ்க்கைக்கு முதன்மையாகக் கொண்டார்; அதனோடு சிறிது வாணிகமும் புரிந்துவந்தார். நம் ஜோஷி கடவுள்வழிபாட்டில் என்றும் ஈடுபாடுடையவர். எல்லாரும் கடவுள்குழந்தைகளே என்று எண்ணுபவர். அவ்வூரில் தாழ்குலத்தவர்கட்குத் தண்ணீர் கிடைத்தல் அருமையாதலின், தாம் கடவுளை வழிபடுங் காலமாய் இருப்பினும் அதனையும் பொருட்படுத்தாது, தம்மை நாடி வரும் ஏழைகட்கு அன்போடு தண்ணீர் உதவுவார்; சிலசமயங்களில் அவர் அவ்வேழைகட்கு மோர், அவல் அல்லது சர்க்கரைகலந்த பொரி முதலியனவும் உவப்போடு வழங்குவார்.

ஜோஷியின் மனைவியாரும் தெய்வபக்தி உடையவரே. ஆயின் அவர் தம் கணவரைப்போல், 'ஏழைகட்கு

உருவு தலும் கடவுள்வழிபாடே' என்னும் எண்ண முடையவர் அல்லர்; குலஆசாரம், பழைய பழக்க வழக்கங்கள் முதலியவைகளில் அவ் வம்மையார் பெரிதும் நம்பிக்கை யுடையவர் ; வீட்டுவேலைகள் பலவற்றையும் சிறிதும் சலிப்பின்றிச் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். அவ் வம்மையார் தம் வீட்டிலுள்ள பசுக்களையும் எருமைகளையும் தாமே கவனித்துக்கொள்வார் ; பிறகு வயலுக்கும் சென்று வருவார் ; ஓழிவு நேர்ந்தபோது வாணிகத்தையும் பார்த்துக்கொள்வார்.

குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு அவ் வம்மையாருக்கே உரியதாய் இருந்தது. ஆண்குழந்தைகள் கற்பதற்கு அவ் வூரில் பள்ளி ஒன்றேனும் இல்லை. அத்தகைய வூரில் பெண்கல்விக்குரிய நிலையம் எவ்விதம் இருக்க இயலும்? வீட்டைப் பெருக்குதல், மெழுகுதல், அரிசி தீட்டுதல், சோறுசமைத்தல் ஆகிய இவைகளே பெண்கள் அறிந்திருக்க வேண்டியவை என்று அவ் வூரினர் எண்ணினர். ஆதலின் ஆங்குப் பெண்கல்வியைக் குறித்த பேச்சே எழுந்ததில்லை. அன்றியும், அந்தக்காலத்தில் இருந்த அந்தணர்கள் தங்கள் பெண்களுக்கு மிக்க இளம்பருவத்திலேயே மணம்முடித்துவிடுவர். எவ்வளவு இளம்பருவத்தில் திருமணம் நிகழ்கின்றதோ அவ்வளவு அந்தப் பெண்களுக்குப் பெருமை. அவ்வாறன்றி, வயது நீடிக்க நீடிக்க அக் குழந்தையின் பெற்றோர்கள் பெரிதும் துன்புறுவர். பார்வதிபாய்அம்மையார் இதனைத் தம் இளவயதிலேயே நன்கு அறிந்திருந்தார். அதனால் அவர், தமக்கு இளமையிலேயே திருமணம் நிகழ்தல் வேண்டும் என்றும், தம்மால் தம் பெற்றோர்கட்குச்

சிறிதும் துன்பம் நேருதல் கூடாதென்றும் எண்ணு-வார்; அதன்பொருட்டுக் கடவுளையும் வேண்டுவார்.

பாலகிருஷ்ணஜோதி தம் மூத்த புதல்வியாருக்கு ஏழுவயதிலேயே திருமணம் நிகழ்த்திவிட்டார். அவ-ருக்கு அடுத்தவராய ஆனந்திபாய்க்கு ஒன்பதாம் வயதில் திருமணம் நிகழ்ந்தது. இவ்விருவரினும் இளையவராய பார்வதிபாய்க்கு வயது பதினென்றாகியும் திருமணம் நடைபெறவில்லை. அவ் அம்மையார் நல்ல உடற்கட்டு வாய்ந்தவராதலின் அவர் தமக்குரிய வயதிற்குமேல் ஏறியவராய்த் தோன்றினார்.

அவ்வூரில் உள்ள பெண்கள் நம் அம்மையாரின் அன்னையை நோக்கி, " ஏன் அம்மா, உங்கள் குழந்-தையை இப்படியா வைத்துவிடுவது! யாரேனும் ஒருவ-ருக்குக் கொடுத்து உங்கள்கடமையைப் போக்கிக் கொள்ளலாகாதா ?" என்று கவலை தோன்றக் கூறுவர். அப்போது பார்வதிஅம்மையார் தம் நிலையினை நினைந்து பெரிதும் வருந்துவார்.

ஒருநாள் ஓர் அம்மையார் வந்து, "கோவாநகரில் உள்ள ஓர் இளைஞருக்குப் பெண் தேவையாம். உங்கள் பார்வதியை அவ் விளைஞருக்குக் கொடுக்கிறீர்களா?" என்று பார்வதியின் அன்னையாரைக் கேட்டார். பிறகு அவ் அம்மையார், "நீங்கள் குலம் கோத்திரம் ஒன்றுமே பார்க்கவேண்டியதில்லை. எல்லாம் பொருத்தமாகவே இருக்கும். ஆனால் அவர் மிக்க ஏழை ; தாய் தந்தை யற்றவர் ; கோவாநகரில் உள்ள கப்பல்துறைமுகத்தில் அவருக்கு வேலை; மாதம் 15 ரூபாய் சம்பளம்; குணம்

தூங்கும்; ஆனால் கால்மட்டும் சிறிது ஊனமாய் இருக்கும். என்ன சொல்கிறீர்கள் ?" என்றார்.

பார்வதியின் அன்னையார் இதனைத் தம் கணவருக்குத் தெரிவித்தார். ஜோஷி முதலில் சிறிது தயங்கினார். அப்போது அவர்மனைவியார் "நொண்டியோ, முடமோ, யாருக்காயினும் ஒருவருக்குப் பெண்ணைக் கொடுத்துவிடுவது நலம். இன்னும் எத்தனைநாள் இவ்விதம் வைத்துக்கொண்டிருப்பது!" என்று ஆற்றாமையோடு கூறினார். ஆதலால், அவ்வந்தணர் "எல்லாம் அவரவர் தலையெழுத்தின்படி தானே நடக்கும்" என்று சொல்லிக்கொண்டு அந்த இளைஞருக்குக் கொடுக்கச் சம்மதித்துவிட்டார்.

பார்வதிஅம்மையாருக்கு அந்த இளைஞரை மணந்துகொள்ளச் சிறிதும் விருப்பம் இல்லை. ஆயினும் அவர், தம் எண்ணத்தைத் தெரிவிக்க இயலாதவராய் இருந்தார். அந்த அம்மையாரின் கருத்தை அறியப் பெற்றோரும் கவலைகொள்ளவில்லை. திருமணத்துக்கு நாள் குறிக்கப்பட்டது. அந்த இளைஞரும் ஒரு வாரம் விடுமுறை பெற்றுக்கொண்டு தேவ்ருக் என்னும் அந்தச் சிற்றூருக்கு வந்து சேர்ந்தார்.

பார்வதிஅம்மையார் முதலில் பெரிதும் வருந்தினார். பிறகு அவரும் தம் தலையெழுத்தில் நம்பிக்கை கொண்டவராய்த் தம் மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டார். மேள தாள முழக்கத்துடன் திருமணம் நடந்தேறியது. அந்த இளைஞர் இரண்டொரு நாள் தம் மாமனார்வீட்டில் இருந்தார்; பிறகு தம் உத்தியோகத்தின்பொருட்டுக் கோவாங்கரம் சென்றுவிட்டார்.

பதினான்கு வயசுவரையில் பார்வதிபாய் தம் பெற்றோர்வீட்டிலேயே இருந்துவந்தார். பிறகு ஒரு நல்ல நாளில் அதவலே என்னும் பெயருடைய அவ் விளைஞர் மறுபடியும் விடுமுறை பெற்று வந்து, நம் அம்மையாரைக் கோரொகருக்கு அழைத்துச்சென்றார்.

அந்த ஊரில் பாலாஜி பாஸ்கர ஜோஷி என்பவர் தம் மனைவியாராய *இரமாபாய் என்பவருடன் ஓர் இல்லத்தில் குடியிருந்துவந்தார். பார்வதிபாயின் கணவருக்கு அந்த ஜோஷி பெரிதும் நட்புரிமை பூண்டவர். வேறு துணை யின்மையாலும், பொருட்சிக்கனம் ஆதலானும் அந்த ஜோஷியின் வீட்டிலேயே நம் அம்மையாரும் அவர்கணவரும் தங்கி ஒரே குடும்பமாக இருந்து காலங்கழிக்கக் கருதினர்.

தம் கணவனார்மீது சிறிதும் விருப்பம் இல்லாதிருந்தும், பின்னர்ப் பழகப்பழக அவர்தம் குணநலம் பலவும் கண்டு, பார்வதி அம்மையார் தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டார். ஆதலின், அவர்தம் இல்லறவாழ்க்கை மிக்க இன்பமாகவே கழிந்துவந்தது. இரமாபாயும் பார்வதிபாயும் உடன்பிறந்தவர்போன்று உள்ளம் கலந்து உறவாடிவந்தனர். சோறு சமைத்தலையும் பிறவேலைகளையும் அவர்கள் முறைவைத்துக்கொண்டு புரிந்துவந்தனர். அவர்களுக்குள் சண்டை சச்சரவு சிறிதும் நேர்ந்ததில்லை. பாஸ்கரஜோஷியும் அதவலேயும் அவ்விதமே தம் நட்புமுறையில் சிறிதும் குன்றாது பழகிவந்தனர்.

---

*இந்த அம்மையார் வேறு, பண்டிதை இரமாபாய் அம்மையார் வேறு.

நம் அம்மையார் இரண்டு ஆண்குழந்தைகளையும் ஒரு பெண்குழந்தையினையும் பெற்றெடுத்தார். அக் குழந்தைகளுள் இரண்டு பிறந்தஅன்றே இறந்து-விட்டன. நாராயணன் என்னும் குழந்தைமட்டும் நம் அம்மையாரின் மகிழ்ச்சிக்குக் காரணமாயிருந்து வளர்ந்துவரலானான்.

இரு குடும்பத்தினரும் சில ஆண்டுகளே அவ்விதம் வாழ்ந்துவந்தனர். அதற்குள் பார்வதிபாய்கணவருக்கு உத்தியோகம் மாறிவிட்டது. அவர் 'ராய்' என்னுஞ் சிற்றூருக்குச் சென்று தொழில் புரிய வேண்டியவ-ரானார்.

அம்மையாரும் அவர்கணவனும் அந்தக் கிரா-மத்தில் ஒரு சில நாட்களே தங்கியிருந்தனர். அவ்வூரின் தட்பவெப்பநிலை அதவலேயினுக்குப் பிடிக்கவில்லை. அங்கே சென்ற சில நாட்களுக்குள் அவ் விளைஞர் மலேரியா என்னும் நச்சுக்காய்ச்சலுக்கு ஆளாயினார். பலவித மருத்துவம் செய்தும் அக் காய்ச்சல் நிற்கவில்லை. அதவலே நாளுக்குநாள் இளைத்து உரு மாறிவிட்டார். அங்கே தகுந்த உதவியும் இல்லை. ஆதலின், பார்வதிபாய் தம் கணவரை அழைத்துக்கொண்டு தேவ்ருக் என்னும் தமது ஊரை அடைந்தார்.

பாலகிருஷ்ண ஜோஷி தம்மால் இயன்ற மருத்துவ முறைகளையெல்லாம் செய்துபார்த்தார். காய்ச்சல் நிற்-கவேயில்லை. அதவலே சில நாள் பாயும்படுக்கையுமாகக் கிடந்து உயிர் நீத்தார்.

பாலகிருஷ்ண ஜோஷியாருடைய மூன்று பெண்-களுள் ஆனந்திபாய் தமக்குத் திருமணம் நிகழ்ந்த சில

நாட்களுக்குள், அதாவது அந்த ஒன்பதாம் வயதிலேயே தம் கணவனை இழந்துவிட்டார். மூத்த புதல்வியாராய யசோதாபாய் கணவனோடு சில நாள் வாழ்ந்து பிறகு கைம்பெண்ணாயினள். மூன்றாவது குழந்தையாய நம் பார்வதிபாயும் விதவைக்கோலம் கொண்டார். அப்போது அவருக்கு வயசு இருபது. இந்த மூன்று கைம்பெண்களுள் பார்வதிபாய்க்குக் கணவர்-சொத்துச் சிறிதும் இல்லை. தங்கியிருப்பதற்கு ஒரு குடிசைவீடும் இல்லை. ஆதலால் அவர், தம் தந்தையார்-வீட்டிலேயே இருந்து காலம் கழிக்க வேண்டியவர் ஆனார். பெற்றோருக்குத் தம்மால் சிறிதும் துன்பம் நேரக்கூடாது என்று கடவுளை வேண்டிய அந்த அம்-மையார் தாம் இறக்கும்வரையும் தந்தையார்உதவியை எதிர்பார்க்கத்தக்க நிலைமையினை அடைந்தார்.

கணவனை இழந்த காரணத்தால், அவ் வம்மையா-ரின் இளவயதையும் நோக்காது தங்கள் பழக்க வழக்-கங்களுக்கு ஏற்ப, பெற்றோர்கள் அவருக்குத் தலையை மழித்துவிட்டனர் ; அவர் அணிந்திருந்த ஆபரணங்களையும் கழற்றிவிட்டனர்; விதவைக்கோலத்-துக் குரிய ஆடையைத் தரிப்பித்தனர் ; இரவில் உணவு கொள்ளுதல் கூடா தெனவும், மெத்தென்ற படுக்கை கூடாதெனவும் கட்டளையிட்டனர்.

நாராயணன் என்னும் ஐந்து வயசுக் குழந்தை தன் அன்னை கொண்ட கோலத்தைப் பார்த்து ஒன்றும் விளங்காமல் திகைத்தான். "அம்மா, உங்கள் அழகிய தலைமயிர் எங்கே ? சிறந்த ஆடையாபரணங்கள் எங்கே ?" என்று அக் குழந்தை தன் அன்னையைக்

கேட்கலாயினன். "குழந்தாய், அப்பா எடுத்துக்கொண்டு போய்விட்டார். நாமும் சிலநாட்களில் அவர் சென்ற இடத்துக்குத்தான் செல்லவேண்டும்" என்று பார்வதியார் துயரத்துடன் மொழிந்தார்.

## பெரியார் டி. கே. கார்வே

பார்வதிபாய்அம்மையார் உழைப்பால் உயர்வுற்ற வரலாற்றினை அறிய விழையும் நீங்கள் இந்தப் பெரியாரின் சரிதையையும் சிறிது அறிவது இன்றியமையாததாகும். இவர் முழுப்பெயர் தோண்டு கேசவ கார்வே என்பது. இவரும் நம் அம்மையார் பிறந்த பம்பாய் மாகாணத்தில் இரத்தினகிரி ஜில்லாவிலேதான் பிறந்தார். இவர் பிறந்த ஊர் ஷிராவலி என்னும் ஒரு சிற்றூர். பிறந்த ஆண்டு கி. பி. 1858.

**ஷிராவலி** என்பது இவர்தம் தாய்மாமன் வாழ்ந்திருந்த ஊர். இப் பெரியாருக்கு உரிமையான ஊரும், இவர் வளர்ந்த ஊரும் மூருட் என்னும் பெரிய ஊர். இந்த ஊரில் இவர்முன்னோர்கள் மிக்க சிறப்பாகவே வாழ்ந்துவந்தார்கள். இப்பெரியாரின் தந்தையார் காலத்தில்தான் இக் குடும்பத்தினர் வறுமையினல் பெரிதும் துன்புறலாயினர்.

அறிஞர் கார்வே முதன்முதலில் தாய்மொழிப்பள்ளியில் படித்தார். இவர் அந்தப் பள்ளியில் இருந்த சிறந்த மாணக்கர்களுள் ஒருவராய்த் திகழ்ந்தார். இவர் தம்முடைய திறமையையோ புலமையையோ பிறரிடம் காட்டிக்கொள்ள விரும்பாதவர். தம்மைத் தெரிவித்துக்கொள்ள நாணித் தம் வாழ்க்கையில் இவர் பலவித

இன்னல்களுக்கு உள்ளாகியிருக்கிறார். இவர் அந்த இளம் பருவத்தில் ஒரு முறை அரசாங்கத்தேர்வின்பொருட்டுத் தம் ஊரிலிருந்து சுமார் நான்கு மைல் தொலைவில் உள்ள ஊருக்குப் பெரிதும் துன்புற்றுச் சென்றார். இவரோடு வேறுசில மாணுக்கர்களும் சென்றிருந்தார்கள். அந்தத் தேர்விற்குவேண்டிய வயசும் இவருக்கு அப்போது ஆகியிருந்தது. இவர் தம் இளமைத் தோற்றத்தைப் பார்த்துத் தேர்வுத்தலைவர்கள் இவர் கூறிய வயசின் கணக்கை ஏற்றுக்கொள்ளவில்லை. இவருடன் சென்ற பிற மாணுக்கர்கள் தேர்வுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டனர். தம் வயசைத் திடமாகக் கூறி அவர்களை நம்பவைக்க இயலாமல் இவர் மிக்க துயரத்தோடு தம் ஊருக்குத் திரும்பினர். அதனல் இவருக்கு ஓர் ஆண்டு வீணய்க் கழிந்தது.

பிறகு இவர் ஆங்கிலக்கல்வி கற்று அதிலும் தேர்ச்சி பெற விழைந்தார். மூருட் பதியில் இருந்த ஒரு செல்வர் தம் மைந்தனுக்குத் தம் வீட்டிலேயே ஆங்கிலம் கற்பிக்க ஓர் ஆசிரியரை ஏற்படுத்தினர். நம் பெரியார் கார்வே அந்தச் சிறுவனேடு சேர்ந்து கற்று ஆங்கிலக்கல்வியில் சிறிது பழக்கம் பெற்றார்; உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மேல்வகுப்புமாணுக்கர்களுட் சிலர் விடுமுறைக்காலங்களில் மூருட் பதிக்கு வரும்போது நம் பெரியார் அவர்களிடம் சென்று தமக்குச் சிறிதும் விளங்காதவைகளையெல்லாம் வினவித்தெரிந்துகொள்வார்.

நம் பெரியாருக்குப் பதினன்காம் வயசிலேயே திருமணம் நடந்தேறிவிட்டது. இவர் தந்தையாரோ

பிகள் குறைந்த வருமானம் உடையவர். தமையனார் ஓர் ஆரம்பப்பள்ளியில் ஆசிரியராய் இருந்து மாதம் ஐந்து ரூபாய் ஊதியம் பெற்றுவந்தார். இத்தகைய நிலையில் பெரியார் கார்வே பம்பாய்நகரம் சென்று உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படிக்க விரும்பினார். அப்போது இவருக்கு வயசு பதினெட்டு.

பள்ளியில் சேர்தற்குப் பொருள்வேண்டுமன்றோ! அதற்காக இவர் ஒரு கடையில் வேலையாளாக இருந்தும், மாணாக்கர்கட்குப் பாடம் கற்பித்தும் சிறிது பொருள் சேர்த்துக்கொண்டு பம்பாய்நகரம் சென்று ஓர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். முதல்ஆண்டில் இருவருக்குப் போதிய பொருள் இன்மையால் பெரிதும் துன்பம் நேர்ந்தது. பிறகு இவர் தமது கல்வித்திறமையினால் உபகாரச்சம்பளம் பெற்றார். அதனோடு இவர் காலை மாலை வேளைகளில் மாணாக்கர்கட்குப் பாடம் கற்பித்தும் சிறிது பொருள் பெற்றார்.

பெரியார் கார்வே இவ்விதமெல்லாம் முயன்று ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண் டிருக்கும்போது தந்தையார் இறந்துவிட்டார். அதனால் இவர்தம் கல்வி தடையுறும்போல் இருந்தது. இவர்தம் அருங்குணத்தமையனாரும் தாயாரும் இவரை மேன்மேலுங் கற்கும்படி தூண்டினர்.

நம் பெரியார் மெற்றிகுலேஷன் என்னும் அரசாங்கத் தேர்வில் நல்ல மதிப்புடன் தேர்ந்தார். அப்போது இவருக்குச் சுமார் 23 வயது இருக்கும். கார்வே பெரியார் அவ்வளவில் தம் கல்வியை நிறுத்திக்கொண்டு உத்தியோகம் புரிய விரும்பவில்லை; எங்ஙனமேனும்

வருந்தி உழைத்துக் கல்லூரிப்படிப்பிலும் தேர்ச்சி பெறவே விரும்பினார். தேர்வில் இவர் நல்ல எண்கள் பெற்றிருந்தமையால் இவருக்குக் கல்லூரியில் பொருள் கொடுக்காமல் கற்றற்குப் போதிய வாய்ப்பு நேர்ந்தது.

கல்லூரியில் சேர்ந்து கற்கும்போதும் மாணாக்கர்கட்குப் பாடம் கற்பித்தலை இவர் விட்டுவிடவில்லை. தம் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டி இவர் இரவும் பகலுமாகப் பல மாணாக்கர்கட்குப் பாடம் கற்பித்துப் பொருள் ஈட்டிவந்தார். தம்முடைய பாடங்களைப் படித்தற்குப் போதிய ஓழிவு இல்லாமலிருந்தும் இவர் எப். ஏ. வகுப்பில் இரண்டாந்தரத்தில் தேர்ந்தார். பீ. ஏ. வகுப்பில் படிக்கும்போது இவருக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. பீ. ஏ. தேர்விலும் இவர் இரண்டாந்தரத்தினராய்த் தேர்ந்தார். நம் பெரியார் பிறகு எம். ஏ. பட்டம் பெறவும் முயன்றார். அப்போது இருந்த பலவிதத்தொல்லைகளால் அது கைகூடவில்லை.

நம் பெரியார் பீ. ஏ. பட்டம் பெற்ற பின்னர், அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்து தொழில் புரிய விரும்பவில்லை. ஆதலால் மாணாக்கர்கட்கு வீடுதோறும் சென்று பாடங் கற்பிக்குந் தொழிலையே முன்னிலும் அதிகமாக மேற்கொள்ள வேண்டியவரானார். பாடம் கற்பிப்பதில் இவர் மிக வல்லுநர். அதிலும் கணிதநூல் கற்பிப்பதில் இவர் நல்ல திறமை பெற்றவர். ஆதலால், இவரிடம் பலரும் அதனையே கற்றுக்கொள்ள விரும்பினர். இவர் காலை 5-மணிமுதல் இரவு 8-மணிவரையில் மாணாக்கர்கட்குப் பாடம் கற்பிப்பார். அதனால்-

இவர் மாதம் 150 ரூபாய்களுக்குக் குறையாமல் பொருள் ஈட்டிவந்தார். அந்தக் காலத்தில் 150 ரூபாய் என்பது ஒரு பெரிய தொகை ஆகும். அத் தொகையில் இவர் மிகச் சிக்கனமாகச் செலவு செய்து தம் குடும்பத்தைக் காப்பாற்றிக்கொண்டு, தம்மால் இயன்ற அறச் செயல்களையும் அவ்வப்போது புரிந்து, சிறிது சேமித்தும் வரலாயினர்.

பார்வதிபாய் அம்மையாரின் தமையனாராய நரஹரி பாலகிருஷ்ண ஜோஷி என்பவரும் நம் பெரியாரும் உயர்நிலைப்பள்ளியிலும் கல்லூரியிலும் ஒரு சாலைமாணாக்கராய் இருந்துவந்தனர். அன்றியும், இவர்கள் இணைபிரியா நண்பர்களா யிருந்தார்கள். ஜோஷிக்கும் இளமையிலேயே திருமணம் ஆகியிருந்தது. ஆதலின் இவ் விருகுடும்பத்தினரும் ஒரே வீட்டில் ஒருகுடும்பமாகவே இருந்து வாழ்ந்துவந்தனர்.

நம் பெரியார் கார்வே பல மாணாக்கர்களைத் தம் இல்லத்தில் வைத்திருந்து அவர்களுக்குப் பாடம் கற்பித்ததோடு அவ்வப்போது வேண்டிய பொருளும் உதவி, அவர்களை முன்னுக்குக் கொண்டுவந்துள்ளார். இவருடைய மாமன் புதல்வரும் தற்போது பெரும் புகழும் பெற்று விளங்குபவருமாகிய டாக்டர், ஆர். பி. பரஞ்ஜ்பை என்பவர் அவர்களுள் ஒருவர். பெரியார் கார்வே பம்பாயில் இருந்தபோது, மூருட் பதியிலிருந்து பல அன்பர்கள் அங்கே உத்தியோகத்தின் நிமித்தம் வந்து தங்கியிருந்தனர். நம் பெரியார் அவர்களையெல்லாம் ஒருங்கு சேர்த்து அவர்களிடமிருந்து பணம் திரட்டி 'மூருட் நிதி' எனத் தொகுத்து அந்த நிதியைக்கொண்டு தம் ஊருக்-

க்குப் பல நன்மைகளைப் புரிந்துவந்தார். இவ்விதமே தங்கள் தாலுக்காவைச்சேர்ந்த அறிஞர்பலரை ஒருங்கு சேர்த்து ஆண்டுக்கு ஒரு முறை வேறு வேறு இடங்களில் கூட்டம் கூட்டி, இன்றியமையாத சீர்திருத்தச்செயல்களைக்குறித்து அவர்களிடம் கலந்துபேசுதல் என்னுந் திட்டத்தினையும் ஏற்படுத்தியிருந்தார். இவைகளால் 1891-ஆம் ஆண்டிலேயே, அதாவது தமது 33-ஆம் வயதிலேயே நம் பெரியார் தம் ஊரினராலும், தம் ஊருக்குச் சுற்றுப்புறத்தே உள்ளவர்களாலும் புகழ்ந்து கூறப்பெற்றார். இவர்குடும்பமும் அப்போதுதான் சிறிது நல்லநிலைக்கு வரத்தொடங்கியது.


இவ்விதம் நம் பெரியார் கார்வே தம்மிடம் வரும் மாணாக்கர்கட்குப் பாடம் கற்பித்தலிலும் பொதுநலத் தொண்டு செய்தலிலும் ஈடுபட்டிருக்கும்போது நம் நாட்டு மக்களின் கல்வியுயர்விற்காகவே பாடுபட்டுப் புகழ்க்கொடி நாட்டிய பெரியார் கோபால கிருஷ்ண கோகலே அவர்களிடமிருந்து நம் பெரியாருக்கு ஒரு கடிதம் வந்தது. இவ்விருபெரியார்களும் பீ. ஏ. வகுப்பில் ஒருசாலை மாணாக்கர்களாய் இருந்தவர்கள். பெரியார் கோகலே அப்போது பூனாநகருக்கு அருகில் உள்ள பெர்க்யூசன் கல்லூரியில் (Fergusson College) ஆங்கிலப் பேராசிரியராய் இருந்தார். நமது நாட்டுரிமைக்காகப் பாடுபட்ட பெரியார்களுள் ஒருவராய பாலகங்காதர திலகர் அக் கல்லூரியில் கணிதப் பேராசிரியராய் இருந்தார். பெரியார் திலகர் சில காரணங்களால் தம் பதவியிலிருந்து நீங்கினார். அது குறித்து நீடு நினைந்த அறிஞர் கோகலே அப் பதவியை ஏற்றுத் திறமையோடு நடத்தக்கூடியவர் நம் பெரியார் கார்வே என்பதை உணர்ந்து

உடனே வரைந்து விடுத்த அழைப்புக்கடிதமே அக் கடிதம்.

மாதம் நூறு ரூபாய் வருமானம் பெற்றுக்கொண்டு இரண்டு ஆண்டுகட்குக் குறையாமல் அக் கல்லூரியில் கணிதபாடம் கற்பிக்கும் ஒப்பந்தத்தோடு அப் பதவியை நம் கார்வே ஏற்றுக்கொள்ள வேண்டியவராய் இருந்தார். அப்போது இருவருக்கு மாதம் 175 ரூபாய்களுக்குக் குறையாது வருமானம் வருவதாய் இருந்தது. இருந்தும், அக் கல்லூரி நம் நாட்டின் கல்விவளர்ச்சிக்கெனவே ஏற்பட்டுள்ளகாரணங் கருதி இவர் அப் பதவியை உடனே ஏற்றுக்கொள்ள இசைந்தார்.

பெரியார் கார்வேமனைவியார் அப்போது உடல்நலமின்மை கருதி மூருட் பதிக்குச் சென்றிருந்தார். நம் பெரியார் அக்கல்லூரியில் தம் ஆசிரியப்பதவியை ஏற்றுக்கொள்ளப் புனுகருக்குப் புறப்படும்போது அவ்வம்மையார் ஆருயிர் நீத்தார் என்னுஞ் செய்தி எட்டியது. அப்போது அடித்த புயற்காற்றின் மிகுதியினுல் நம் கார்வே உடனே தம் ஊருக்குச் செல்ல இயலாதவராயிருந்தார்.

பெர்க்யூசன்கல்லூரியில் கணிதப் பேராசிரியராய் அமர்ந்து பேரும் புகழும் பெறவேண்டிய நிலையில் இருந்த நம் பெரியார் கார்வே எதிர்பாராது நேர்ந்த இத் துயரத்தால் பெரிதும் திகைக்கலாயினுர். அம்மையார் இராதாபாயின் பிரிவு நம் பெரியாரின் வாழ்க்கைநிலையினை முற்றிலும் மாற்றுவதாய் இருந்தது. அப்போது நம் பெரியாருக்கு வயது 33. 'மறுபடியும் ஒரு சிறுமியை



மணந்து இல்லறவாழ்க்கை நடத்துவதா, அன்றிப் பொதுநலத் தொண்டுகளிலேயே ஈடுபட்டுத் தன்னந்-தனியே இருந்து காலத்தைக் கழிப்பதா, என்று நம் பெரியார் நெடிது நினைந்து பார்த்தார். தாம் மறு-படியும் திருமணம் செய்துகொள்ளுதல் கூடாதெனவும், அவ்விதம் நேர்ந்தால் தம் வயதுக்கேற்ற ஒரு கைம்-பெண்ணையே திருமணம் செய்துகொள்ளுதல் வேண்டும் என்றும் அப்போதே அவர் தீர்மானம் செய்து-கொண்டார்.

இவர் எண்ணத்தை மாற்றுதற்கு இவர்தம் அன்னையாரும், சுற்றத்தினர் பிறரும் பெரிதும் முயன்-றனர். அவர்களின் கருத்துக்கு நம் பெரியார் சிறிதும் இணங்கிலர். கணிதப் பேராசிரியர் பதவி அப்போது இவர்தம் துயரைப் போக்குதற்கு ஏற்றதாய் இருந்தது. கணிதத் துறையில் மிகப் பிற்போக்கான நிலையில் இருந்த மாணவர்கட்குப் பொறுமையோடு கற்பிக்குந்-திறமை இவரிடத்து அமைந்திருத்தல் கண்டு மாணாக்கர் பலரும் இவரிடம் விரும்பிக் கற்றனர். இரண்டாண்டு [illegible] சென்ற இவர் நான்கு மாதங்களுக்குள் அக் கல்லூரியில் என்றும் நிலைத்த பதவியைப் பெற்றார்.

## ஆனந்திபாயும் அவர் தம் புதுமுறை வாழ்க்கையும்

தேவ்ருக் என்னுஞ் சிற்றூரில் வாழ்ந்துவந்த பாலகிருஷ்ண ஜோஷியார்புதல்வியர் மூவரும் இளமையிலேயே கைம்பெண்களான வரலாற்றினை நீங்கள் முன்னரே அறிந்திருக்கிறீர்கள். அம் மூவருள் இளையமகளாராய பார்வதிபாய் ஏறக்குறைய ஏழெட்டு ஆண்டுகளாவது தம் கணவனாரோடு வாழ்ந்து இல்லறம் நடத்திக் குழந்தைகளையும் பெற்றார். மூத்த மகளாராய யசோதாபாய் குழந்தைகளைப் பெறாவிடினும் தம் கணவனாரோடு சிறிது காலமாவது வாழ்ந்திருந்தார். இவ்விருவருக்கும் இடையே பிறந்த ஆனந்திபாயோ ஒருநாளேனும் தம் கணவனாருடன் வாழ்ந்தறியார் ; திருமணம் ஆன அந்த ஒன்பதாம் வயதிலேயே கைம்பெண் ஆனவர். இந்த அம்மையாரைக்குறித்து அந்தக் குடும்பத்தில் அனைவருக்கும் கவலை மிக்கிருந்தது.

கைம்பெண் மறுமணச்சட்டம் 1858-ஆம் ஆண்டிலேயே நிறைவேறியிருந்தும் அது நடைமுறையில் பரவவேயில்லை. அறிஞர் இரானடே, டாக்டர் பந்தர்கார் போன்ற சீர்திருத்தக்காரர்கள் அவ்வப்போது மாநாடுகள் கூட்டிப் பெரிதும் கிளர்ச்சி செய்துவந்தார்கள். இத்தகைய கூட்டம் ஒன்றினுக்குப் பாலகிருஷ்ண ஜோஷியும் சென்றிருந்தார். அப்போது அங்குள்ளோர் கைம்பெண்மறுமணத்தைக்குறித்து மிக அழகாகவே பேசினார்கள். நம் ஜோஷிக்கும் அது உடன்பாடாகவே இருந்தது. ஆயினும், செயல்முறையில் இயலாதவராய்த் துன்புற்றவண்ணம் இருந்தார். அவர்புதல்வர் நரஹரி ஜோஷிக்கும் கைம்மைமறுமணத்தில் பெரிது விருப்பம்

உண்டு. தம் தங்கை ஆனந்திபாய்க்கரினும் அவ்வாறு புரிதல்வேண்டும் என்று அவர் எண்ணுவதுண்டு. அதனால், முதலில் கல்விப் பயிற்சியையேனும் தம் தங்கைக்கு அளிக்க அவர் விரும்பினார்.

பெரியார் கார்வே, அவர்தம் நண்பர் நரஹரிஜோஷி ஆகிய இருவரும் பம்பாய்நகரில் ஒரேகுடும்பமாக வாழ்ந்திருக்கும்போது ஆனந்திபாய் அங்கே வருதல் உண்டு. பெரியார் கார்வே அவ்வம்மையாரைக் காணும்போதெல்லாம் பெரிதும் வருந்துவார்; 'இந்தக் கொடுமை நம் நாட்டிலே எப்போதுதான் நீங்குமோ!' என்று எண்ணி வருந்துவார். அப்போது அவர், தம் முதல்மனைவியாரோடு இல்லறம் நடத்திவந்த காலமாதலால், அவ்வம்மையார் தமக்கு மனைவியாராகவேண்டும் என்று அவர் அக்காலத்தே சிறிதும் எண்ணுதற்கிடமில்லை.

ஆனந்திபாய் பம்பாய்நகரில் வந்து தங்கியிருந்தபோதுதான் பண்டிதை இரமாபாய்அம்மையார் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய இடங்களுக்குச் சென்று பம்பாய்நகரில் வந்து தங்கியிருந்தார். அறிஞர் இரானடே, டாக்டர் பந்தர்கார் முதலிய பெரியோர்களின் துணைகொண்டு அவர் 'சாரதாசதனம்' ஏற்படுத்தினார். அந்தச் சதனத்தில் முதன்முதலிலே சேர்ந்தவர் நம் ஆனந்திபாய் அம்மையே. அவ்வம்மையாரை அவ்விதம் துணிவோடு கொண்டுபோய்ச் சேர்த்தவர் அவர்தம் தமையனாராய நரஹரி ஜோஷியே. அவ்வம்மையாரும் தம் நிலையினை நினைந்தோ, தம் தமையனார் முதலிய அறிஞர்களின் எண்ணத்தை மீறிநடக்க அஞ்சியோ,

அந்தச் சதனத்தில் சேர்ந்து கல்வி பயிலத் தொடங்கினர். அந்தச் சதனம் புனாநகரத்துக்கு மாற்றப்பட்டபோது நம் அம்மையார் புனாவுக்கும் சென்று கல்வி பயின்று வந்தார்.

பெரியார் கார்வே தம் மனைவியாரை இழந்து தனித்திருந்த காலத்தில் நரஹரி ஜோஷியும் தம் மனைவியாரை இழந்தவராய் இருந்தார். ஆதலால் அவர்கள் இருவரும் ஒருவகையில் ஒத்த கருத்துடையராயே இருந்தனர். கைம்பெண்மணம், பெண்கள்முன்னேற்றம் முதலியவற்றிலும் ஒன்றுபட்ட எண்ணமுடையோராய் இருந்தனர். ஆதலால், ஜோஷி அடிக்கடி கார்வேஊருக்குச் செல்வார். கார்வே அவ்விதமே ஜோஷியின் ஊருக்குச் செல்வார்; அவர்தம் தந்தையாராய பாலகிருஷ்ண ஜோஷியினிடமும் உரையாடுவார்.

கார்வேயும் நரஹரியும் திருமணம் செய்துகொள்ளாமல் இருப்பது பாலகிருஷ்ண ஜோஷிக்குச் சிறிதும் பொருத்தமாகத் தோன்றவில்லை. ஆதலால் அவர் ஒருநாள் நம் பெரியாரை நோக்கி, "நீர் ஏன் மறுமணம் செய்துகொள்ளாமலே இருக்கிறீர்?" என்று வினவினர். அப்போது நம் பெரியார் சிறிது தயங்கி, "என் மனத்துக்கு ஏற்ற ஓர் இளங் கைம்பெண் கிடைத்தால் நான் விருப்பத்தோடு மணஞ் செய்துகொள்வேன். இல்லையேல், என் வாழ்நாள் இவ்விதமே கழியவேண்டியதுதான்" என்று கூறினர்.

"அதற்காக நீர் உமது வாழ்நாட்களை வீணாக்கப் போகிறீரா?" என்றார் பாலகிருஷ்ண ஜோஷி.

"நம் நாட்டில் கணக்கற்ற இளங் கைம்பெண்களின் வாழ்நாட்கள் வீணாகும்போது ஓர் ஆடவனின் வாழ்நாள் வீணாகுவதில் குற்றம் என்ன?" என்றார் நம் பெரியார்.

பாலகிருஷ்ண ஜோஷிக்கு அப்போது தம் மகள்மீது பரிவு வந்தது. தம் மகள் ஆனந்திபாய் போன்றவர்கள் மறுமணம் செய்துகொள்வதில் சிறிதும் தவறில்லை என்று அவருக்குத் தோன்றியது. அந்தக் குழந்தையின் நலத்திற்காக எத்தகைய துன்பத்தினையும் தாம் அடையலாம் என்றும் அவர் எண்ணினார். ஆதலால் பெரியார் கார்வே அவர்களை நோக்கி, ஸ்ரீ ஜோஷி, "அப்படியானால் என் மகள் ஆனந்திபாயை மறுமணஞ் செய்துகொள்ள உமக்கு விருப்பந்தானா?" என்றார்.

பெரியார் கார்வே அவர்களுக்கு இவ்வெண்ணம் ஒரு சில நாட்களுக்கு முன்னரேனும் இருந்திருத்தல் வேண்டும். ஆயினும், ஓர் இளங் கைம்பெண்ணைத் தமக்குத் திருமணம் செய்விக்க அப் பெண்ணின் பெற்றோரை அவர் எவ்விதம் கேட்பார்? ஆனந்திபாய்-தந்தையாரே இவ்விதம் கேட்டதனால் அப்போது தம் எண்ணம் ஈடேறலாம் என்று அவருக்குத் தோன்றியது.

ஆதலால் கார்வே, "அவ் வம்மையாருக்கு விருப்பம் இருக்குமாயின் எனக்கும் விருப்பமே" என்று கூறினார்.

இதனைக் கேட்டதும் பாலகிருஷ்ண ஜோஷிக்குப் பெரிதும் பரபரப்பு உண்டாயிற்று. 'எத்தகைய இடையூறுகள் நேரினும் அவைகளுக்கெல்லாம் சிறிதும் தயங்-

...து இதனை முடித்துவைத்தலே சாலச் சிறந்தது' என்று அவர் எண்ணினார். ஆதலால் அவர் உடனே 'சாரதா சதனம்' சென்று ஆனந்திபாயிடம் தக்க முன்னுரையோடு இதனைத் தெரிவித்தார்.

நம் அம்மையாருக்கு அப்போது இருபத்தைந்து வயசு இருக்கலாம். அவர் இதற்குமுன்னரே தம் வாழ்நாள் வீணாயினமை குறித்து நீடு நினைந்திருப்பார். சாரதாசதனத்தில் சேர்ந்த காரணத்தால் போதிய உலக அறிவும், சீர்திருத்த நோக்கும் அவருக்கு அமைந்திருக்கும். ஆதலால் அவருக்கு அது உடன்பாடாகவே இருந்தது. அதனைக் குறிப்பால் உணர்ந்த பாலகிருஷ்ண ஜோஷி 'இனிச் சிறிதும் தாமதிக்கலாகாது' என்று தம் மகளாரின் திருமணவிழாவுக்கு வேண்டுவன செய்யத் தொடங்கினார். சீர்திருத்தச் செயலினை நடைமுறையில் காட்ட முன்வருபவர்கள் கல்வி, செல்வம், அழகு, குணம் முதலியவற்றையும் பொருட்படுத்தாது தமது நோக்கத்தினை நிலைநாட்டுதலிலேயே எண்ணமாக இருப்பார். நம் கார்வேபெரியார் தம் எண்ணத்தின்படி நேர்ந்தது கருதிப் பெரிதும் மகிழ்ச்சியே உற்றார். இதனால் தமக்கு நேரத்தக்க பலப்பல இன்னல்களையும் அவர் ஏற்கச் சித்தமாய் இருந்தார்.

திருமணம் புனாநகரில் நிகழ்த்த ஏற்பாடாயிற்று. இதனை நடத்திவைப்பதற்குரிய வைதிக அந்தணர் கிடைப்பது அரிதல்லவா! நல்ல காலமாக வயசிலே முதிர்ந்த வைதிகஅந்தணர் இந்த மறுமணச் சடங்கினை நடத்திவைக்க உவகையோடு தாமே முன்வந்து உதவி-

ஞர். இரானடே போன்ற சீர்திருத்த அறிஞர்கள் பலர் வந்து கூடியிருக்க, மிக்க சிறப்போடு கி. பி. 1893-ஆம் ஆண்டு மார்ச்சு ஒன்பதாம் நாள் பெரியார் கார்வே அவர்களுக்கும் ஆனந்திபாய் அம்மையாருக்கும் இனிதே திருமணம் நடந்தேறியது.

இந்த நிகழ்ச்சியை அறிஞர் பலரும் ஆதரித்தனர். பத்திரிகைகள் பாராட்டி எழுதின. வைதிகக் கொள்கையில் பெருவிருப்புடைய பெரியார் திலகரும் இதனை ஆதரித்தார். ஆனால், முருட்டுப்பதியில் இருந்தவர்களும், தேவருக் கிராமத்தில் இருந்தவர்களும் இதனைச் சிறிதும் ஏற்றுக்கொள்ளவில்லை. திருமணம் செய்து கொண்ட அவ் இருவரும் தம் ஊரில் எந்தவகைய நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளுதல் ஆகாது என்று கூறிவிட்டனர்; தம் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்த பாலகிருஷ்ண ஜோஷியைத் தம் குலத்திலிருந்தே விலக்குதல் வேண்டும் என்று கூறினர். அவர் வீட்டிற்கு எந்த வேலையாளும் செல்லுதல் கூடாதெனத் தடுத்தனர். பாலகிருஷ்ண ஜோஷி முதலில் ஓராண்டு இத்தகைய தடைகளால் பெரிதும் துன்பமுற்றார். நூறு ரூபாய் செலவுசெய்து அவ்வூரில் உள்ள கோயிலைப் புதுப்பித்தபின்னரே அவருக்கு அவ் இடையூறுகள் ஒருவாறு நீங்கின. ஆயினும் ஆனந்திபாயை அவர் மறுபடியும் போய்ப் பார்ப்பதற் கில்லாமலேயே இருந்தார்.

நம் பெரியார்கார்வேயின் வீட்டாரும் ஆனந்திபாயையும் கார்வேயையும் நீக்கிவைத்தார்கள். கார்வே தம் ஊருக்குச் செல்ல முடியாமல் இருந்ததைக்குறித்துச் சிறிதும் வருந்தவில்லை. தம் அன்னையாரைப் பார்ப்-

படிக்கவில்லையே என்னும் துயரம் அவருக்கு மிக்கிருந்தது. அதனால் அவர் எவர்கண்ணிலும் படாமல் நள்ளிரவிலே தம் ஊருக்குச் சென்று தம் அன்னையாரைப் பார்த்து மீள்வார். இவ்விதம் பல ஆண்டுகள் கடந்தபின்னரே நம் பெரியார் தம் ஊருக்கு உரிமையோடு செல்லலாயினர்.

யார் எவ்விதம் இருப்பினும் கார்வேபெரியாரும் ஆனந்திபாய்அம்மையாரும் இத் திருமணத்தால் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர். அவர் தம் குடும்பவாழ்க்கை இன்பமாகவே நடைபெற்றுவந்தது. மணம் நிகழ்ந்த ஒன்றரைஆண்டுக்குள் அவர்கட்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பின்னரும் சில குழந்தைகள் பிறந்தன.

நம் ஆனந்திபாய் தம் திருமணத்திற்குப் பின் கல்வியிலே பெரிதும் கருத்தைச் செலுத்தினர் என்று சொல்லுதற் கில்லை. ஆயின், தம் கணவனர் புரியும் பொதுநலத் தொண்டுகள் பலவற்றினுக்கும் தம்மால் இயன்ற உதவிகள் பலவும் புரிந்துவந்தார்.

## பார்வதிபாய் புனநகருக்குச் செல்லுதல்

ஆனந்திபாய்க்குத் தம் வாழ்க்கை ஒழுங்குபட்டவுடனே, அவருக்கு, தங்கையாராய பார்வதிபாயைக் குறித்த எண்ணமே பெரிதாக இருந்தது. அவ் வம்மையாரும் தம்மைப்போல் மணம் புரிந்துகொள்ளுதல் வேண்டும் என்பது ஆனந்திபாயின் கருத்தன்று. தம் தங்கையார் எவ்விதமாயினும் முன்னேற்றமுறல்வேண்டும் என்பதே அவர்தம் பேரவா. தம் தங்கையார் தம்முடன் சிலநாள் இருந்தால் கல்வியில் முன்னேற இயலும்

என்று ஆனந்திபாய் எண்ணினார். ஆனால் அவ் வம்மையார் அங்கே அடியெடுத்தும் வைக்க இயலாதவராய் இருந்தார்.

தம் தமக்கையாரின் திருமணங்குறித்துப் பார்வதிபாய் அளவிலா மகிழ்ச்சி கொண்டார். ஆயினும், தாமும் அவ்வாறு மறுமணம் புரிந்துகொள்ளுதல் வேண்டும் என்று அவ்வம்மையார் தம் கனவிலும் கருதியதேயில்லை. தேவ்ருக் கிராமத்தில் இருந்த பெண்கள் பலரும் நம் பார்வதிபாயைப் பார்க்கும்போதெல்லாம், "உனக்கு எப்போது அம்மா திருமணம்? நீ யாரை மணந்துகொள்ள எண்ணியிருக்கின்றாய்?" என்பனபோன்ற கேள்விகளை நகைக்குறிப்புத் தோன்றக் கேட்பாராயினர்; அப்போது நம் அம்மையார் "இவர்கள் ஏன் இவ்விதம் எள்ளுகின்றனர்!" என்று தமக்குள் எண்ணி வியப்புறுவார்.

பார்வதிபாயின் அன்னையாருக்கோ இத்தகைய சீர்திருத்தம் சிறிதும் பிடிக்கவில்லை. ஆனந்திபாய்க்கு இவ்விதம் நேர்ந்தது தம் குடும்பத்துக்கே ஒரு பேரிழுக்கு என்று அவர் எண்ணினார். மற்ற இருபெண்களும் தமக்குத் தெரியாமலேயே இவ்விதம் மறுமணம் செய்துகொள்வார்களோ என்றும் அவ்வம்மையார் அஞ்சினார்; அவ்விதம் என்றுமே நேருதல் கூடாதென்று கடவுளை வேண்டிவந்தார்.

ஆனந்திபாய்க்கு ஆண்குழந்தை பிறந்தது கேட்டுப் பாலகிருஷ்ண ஜோஷி அளவிலாமகிழ்ச்சி கொண்டாராயினும் நேரில் சென்று கண்டு களிப்பதற்கு இயலாத-

வராய் இருந்தார். அந்த எண்ணம் நிறைவேறுதற்கு ஒரு நன்னாள் நேர்ந்தது.

கைம்மைத்திருமணம் செய்துவைத்ததனால் நேர்ந்த பாவத்தைத் தொலைத்துக்கொள்ளவோ, தம் ஊரினரை மகிழ்விக்கவோ, இவை அன்றி, இயல்பிலே எழுந்த ஓர் அவாவினாலேயோ நம் பாலகிருஷ்ண ஜோஷியும் அவர் மனைவியாரும் காசிக்குப் புறப்பட்டனர். அப்போது அவர்கள் பார்வதிஅம்மையாரையும் உடன் அழைத்துச் செல்ல விரும்பினர்.

அவ்விதம் புறப்பட்டவர்கள் புனாநகருக்குச் சென்று ஆனந்திபாயின் குழந்தையையும் பார்த்துச்செல்ல எண்ணங்கொண்டனர். ஆனந்திபாய் தம் பெற்றோரைக் கண்டதும் பெரிதும் மகிழ்ச்சிகொண்டார். அவர்களோடு பார்வதிபாயும் வந்தது அளவிலா மகிழ்ச்சியை அளித்தது. பார்வதிபாயைப் புனாநகரிலே வைத்துக் கொள்ளுதற்கு இது தக்க வாய்ப்பு என்று ஆனந்திபாய் எண்ணினார்; எண்ணியவிதமே தம் கருத்தையும் அவர்கட்கு ஒருவாறு அறிவித்தார். ஆனால் அதற்கு அவர்கள் அன்னையார் இசையவில்லை. காசிக்குச் செல்லும் வழியில் வயிற்றுக்கழிச்சல் முதலிய நச்சுநோய் பரவியிருப்பதாக ஆனந்திபாய் அறிவித்தார். "இவள் இங்கே இருந்து பழிச்சொல் பெறுவதிலும் காசிக்குச் செல்லும் வழியில் இறத்தலே நலம்?" என்று அவர் அன்னையார் அப்போது கடிந்து கூறினர். "நான் இதற்குச் சிறிதும் இடங்கொடேன். பார்வதி அத்திபூத்தாற்போல் ஓர் ஆண்குழந்தை வைத்திருக்கின்றாள். நீங்கள் வேண்டுமானால் அங்கே செல்லுங்கள். பார்வதி

இங்கேதான் இருக்கவேண்டும்" என்று ஆனந்திபாய்
பிடிவாதமாகக் கூறினர். அப்போது அந்த அன்னை-
யாருக்குக் கோபம் பொங்கியெழுந்தது. "பார்வதி, நீ
என்னோடு வரவேண்டும். அல்லது நம் ஊருக்குத்
திரும்பிப்போகவேண்டும். இவ்விரண்டில் ஒன்றைச்
செய்யாவிடில் நான் இங்கேயே குளங்குட்டைகளில்
விழுந்து இறப்பேன்" என்று மிக்க துயரத்துடன் அவ்-
வன்னையார் கூறினார். உடனே பார்வதிபாய், "அம்மா,
நான் யாரேனும் ஒருவரைத் துணை கூட்டிக்கொண்டு நம்
ஊருக்கே செல்கின்றேன். இது முற்றிலும் உண்மை"
என்று உறுதிமொழி கூறினார்.

பிறகு, பெற்றோர் இருவரும் காசிக்குப் புறப்பட்ட-
னர். பார்வதிபாயும் தாம் கூறியவண்ணமே தம் ஊர்
போய்ச் சேர்ந்தார். பாலகிருஷ்ண ஜோசியாரும் அவர்-
மனைவியாரும் இரண்டு மாதங்களில் தம் ஊருக்குத்
திரும்பினர். பார்வதிபாய் தான் கூறியபடியே நடந்து-
கொண்டது அறிந்து அவர்கள் இருவரும் மகிழ்வெய்-
தினர்.

சில மாதங்கள் சென்றன. பார்வதிபாயின் அருந்
தவச் செல்வனாய நாராயணனுக்கு ஏழாவது வயது
தொடங்கிற்று. அக்குழந்தைக்குப் பூணூல்திருமணம்
புரியப் பார்வதிஅம்மையார் விழைந்தார். மிராஜ் என்-
னும் ஊரில் அக்குழந்தைக்குச் சிறியதந்தையார் இருந்-
தார். அவர் மிக்க ஏழை. அவருக்கு மாதம் எட்டு
ரூபாய் ஊதியம் வரும். அத்தகைய நிலையில் உள்ள
அவரை அழைப்பித்து நம் அம்மையார் சிக்கனமான
முறையில் பூணூல்திருமணம் முடித்துவைத்தார். அக்-

புனாநகரம் மக்கள் முன்னேற்றத்துக்கு ஏற்றதொரு நகரம். சிற்றூரிலேயே பெரிதும் காலம் கழித்த பார்வதிபாய்க்குப் புனாநகரம் ஒரு பெரிய புதுமையாகவே இருந்தது. அக்காலத்தே அங்கே இரானடே போன்ற பெரியார் பலர் இருந்தமையான் அடிக்கடி கூட்டங்கள் பல நிகழும். அக்கூட்டங்களில் பலப்பல பேச்சுக்களும் நிகழும். அவைகளே அன்றி, நம் பெரியார் கார்வே அப்போது செய்யத்தொடங்கிய சில அருஞ்செயல்களும், அவைகாரணமாக அவர் நிகழ்த்திவந்த ஆர்வம் ததும்பிய உரையாடல்களும் பார்வதி அம்மையாருக்குப் புத்துயிரளித்தன. ஆதலால் பார்வதி அம்மையார் அங்கேயே நிலைத்து நின்றுவிட வேண்டியவராயினார்.

## ஆரம்பப்பள்ளியாசிரியை ஆதல்

கைம்பெண்மறுமணத்தோடு தம் கடமை முடிந்துவிட்டதாக நம் பெரியார் கார்வே கருதிவிடவில்லை. பெர்க்யூசன் கல்லூரியில் கணிதநூற் பேராசிரியராய் இருந்துவரும் காலம் போக ஒழிந்த வேளைகளில் அவர் நம் நாட்டில் உள்ள இளங் கைம்பெண்களின் துயரத்தைப் போக்குதற்குரிய வழிகளைப் பெரிதும் எண்ணிப் பார்த்து அதற்குத் தம்மால் ஆவன புரிந்து வரலாயினர். தம்மைப்போல் கைம்பெண்மணம் செய்துகொண்டவர்களையெல்லாம் ஒன்றுசேர்க்க அவர் முதலில் ஒரு கழகம் நிறுவினார்; கைம்பெண்மறுமணங்கள் சில செய்தும் வைத்தார்; அத்தகைய மணங்களைப் புரிதற்கு அந்தணர் பலர் இணங்காமையால் அதற்கெனப் புரோகிதர் ஒருவரை மாதச் சம்பளம் ஈந்து

ஏற்படுத்தினர். இவ்விதம் பலப்பல புரிந்தும் கைம்பெண்கொடுமை நீங்குவதாகத் தெரிய வாராமையால், அத்தகைய இளங் கைம்பெண்களுக்காக ஓர் இல்லம் நிறுவி அதில் அவர்களைச் சேர்த்து அவர்களுக்கு வேண்டிய கல்விமுறைகளைக் கற்பித்தால்அன்றி அக் கொடுமைகள் நீங்கா என்று நம் பெரியார் ஒருமுடிவிற்கு வந்தார்.

பண்டிதை இரமாபாய்அம்மையாரால் ஏற்படுத்தப்பட்ட சாரதாசதனத்திலிருந்து வெளிவந்துவிட்ட வைதிகக்கைம்பெண்களுக்காக வேறு இல்லம் அமைத்தல் வேண்டுமெனப் பலரும் ஆரவாரம் செய்தனரே அன்றி அச்செயல் புரிய எவரும் முன்வரவில்லை. நம் பெரியார் கார்வேஅவர்கள் அவ்விதம் ஓர் இல்லம் அமைக்க எண்ணி, அதற்கு ஆவன புரியத் தொடங்கினார்.

முதலில் நம் பெரியார் கைம்பெண்மறுமணக் கழகத்தினர்சார்பில் அத்தகைய இல்லம் ஒன்றைத் தொடங்க எண்ணினார். அதன்பொருட்டு அக் கழகத்தினர் சிறிது பொருளும் சேர்க்கலாயினர். கைம்பெண் திருமணம் பலருக்கும் உடன்பா டன்றாகலின், அத்தகைய கழகத்தினர்சார்பில் இது தொடங்கப்பெறுமானால் பொதுமக்கட்கு ஐயுறவு தோன்றும் என்னும் எண்ணத்தால் நம் பெரியார் அக் கருத்தினை மாற்றி, தாமே தம் பொறுப்பில் கைம்பெண்இல்லம் நடத்தத் தொடங்கினார். அக் கழகத்தினரும் அதற்கு உடன்பட்டுத் தம்மிடம் இருந்த சிறு தொகையினையும் கார்வேஅவர்களிடம் கொடுத்துவிட்டனர்.

பெரியார் கார்வே இரவும் பகலுமாக வருந்தி உழைத்துச் சேமித்து வைத்திருந்த பொருளிலிருந்து ஆயிரம் ரூபாய் முதலில் உதவினார். பிறகு பிறரிடம் இரந்து பொருள் பெற்று 1896-ஆம் ஆண்டில் சிறிதாக ஓர் இல்லம் ஒரு குடிக்கூலிவீட்டில் நிறுவினார். அப்போதுதான் நம் பார்வதிபாய் அம்மையாரும் அங்கே வந்து சேர்ந்தார்.

நம் பார்வதிபாய் அம்மையாருக்குப் போதிய கல்வியைப் புகட்டிப் பிறநாடுகளின் முன்னேற்றத்தினையும் நம்நாட்டுப் பெண்களின் நிலைமையினையும் நம் கடமையினையும் நன்கு விளக்கினால், அவ் வம்மையார் சில அரிய பெரிய தொண்டுகளை ஆற்றுதல் கூடும் என்று பெரியார் கார்வே எண்ணினார். பார்வதிஅம்மையார் பூனாவுக்கு வந்த சில நாட்களுக்கெல்லாம் நம் பெரியார் அந்த அம்மையாரை நோக்கி, 'நாங்கள் கைம்பெண் இல்லம் ஒன்று அமைக்கப்போகின்றோம். அதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொண்டு புரிதல்வேண்டும். நீ என்ன தொண்டு புரிவாய்?' என்று கேட்டார்.

இத்தகைய நிகழ்ச்சிகள்எல்லாம் ஒருசிறிதும் தெரியவாராத குக்கிராமவாழ்க்கையிலிருந்த அந்த அம்மையாருக்குக் 'கைம்பெண் இல்லம்' என்றால் என்ன என்பதே முதலில் விளங்காமல்இருந்தது. பிறகு நம் பெரியார் கார்வே, நம் நாட்டில் ஆடவர்களுக்காக நிகழ்ந்துவரும் குருகுலவாசம், மடம் முதலியவைகளையும், மேல்நாடுகளில் நடைபெற்றுவரும் பல பல புது புது இயக்கங்களையும் விரிவாக எடுத்துக்கூறிய-

போழுதான் அவ் வம்மையாருக்குக் 'கைம்பெண் இல்லம்' என்பதன் நோக்கம் ஒருவாறு விளங்கியது. ஆயினும், அத்தகைய முறையில் அமைக்கப்பெறும் இல்லத்தில் நம் அம்மையாரால் என்ன தொண்டு புரிய இயலும்! ஆதலால் அவர் "நீங்கள் அத்தகைய இல்லம் ஏற்படுத்தினுல் நான் அங்கே சோறு சமைத்துப்போடுந் தொண்டு புரிகின்றேன்" என்ருர்.

அப்போது நம் பெரியார் நகைத்து, "பார்வதி, சோறு சமைத்தற்குப் பணியாளர் கிடைப்பர். அதற்காக நாங்கள் உன்னை இங்கே அழைத்து வரவில்லை. அதனினும் சிறந்த பல தொண்டுகள் நீ புரியவேண்டியவை இருக்கின்றன. நீ முதலில் படிக்கக் கற்றுக்கொள். எப்படியாவது முயன்று எட்டாம்வகுப்புவரையில் படித்துவிடு. பிறகு நீ ஆசிரியர்பதவியில் அமர்ந்து பல அரிய பணிகளைப் புரியலாம்" என்ருர்.

பார்வதிஅம்மையாருக்கு அப்போது இருபத்தாருவது வயசு தொடக்கம். அவ்வளவுகாலமும் ஒரு பட்டிக்காட்டில் இருந்துவிட்டு அந்த வயசில் அ, ஆ என்று படிக்கக் கற்றுக்கொள்வது எளிதில் இயலுவதா! ஆயினும் உறுதியான உள்ளம் வாய்ந்த அவ்வம்மையார் வருந்தி உழைக்க முன்வந்தார். பெரியார் கார்வே அவ்வப்போது கூறிவந்த நல்லுரைகளும், தம் தமக்கையார் ஆனந்திபாயின் தூய உள்ளமும், நம் அம்மையாரைப் பெரிதும் ஊக்குவித்தன. படிப்பு என்பது இன்னதென்றே அறியாத அவ் வம்மையார் பலமுறை அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். 'எனக்கு இந்தத்

துன்பமெல்லாம் வேண்டாம். நான் சோறு சமைத்துப் போடுகிறேன்', என்று நம் பார்வதியார் சிலவேளை கூறுவார்; 'ஊருக்குத் திரும்பிவிடலாமா?' என்றும் எண்ணுவார். அவ்வேளைகளில் ஆனந்திபாயின் உருக்கமான மொழிகளே நம் அம்மையாரின் உள்ளத்தைத் திருப்பின.

'மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார்' என்னுஞ் செய்யுளின் கருத்து அவ் வம்மையாருக்கு எவரும் உரைக்காமலேயே நன்கு விளங்கிவிட்டது. அவர் மிக்க பொறுமையோடு முதலில் எழுத்துக்களையெல்லாம் பிழையின்றிப் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார்; பிறகு ஒன்றுமுதல் நூறுவரையில் முறையாகவும் தலைகீழாகவும் சொல்லத் தெரிந்துகொண்டார்; பின்னர் இரண்டெழுத்து மூன்றெழுத்துச் சொற்களைக் கூட்டிப் படிக்கவும், வாய்பாடு நெட்டுருப்போடவும் துவங்கி அவைகளிலும் சிறிது பழக்கம் பெற்றார்.

இவையாவும் ஒருவாறு முடிந்ததும் ஆனந்திபாய், தம் தங்கை பார்வதிபாயை அழைத்துக்கொண்டு அங்கு உள்ள ஓர் ஆரம்பப்பெண்பாடசாலையை அடைந்தார்; நம் அம்மையாரை இரண்டாம்வகுப்பில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று அங்கே இருந்த ஆசிரியரிடம் கேட்டுக்கொண்டார். அவர் பார்வதிபாயைப் பரீட்சித்துப்பார்த்து, "இந்தஅம்மையார் முதல்வகுப்பிற்கே தகுதியில்லையே. இரண்டாம்வகுப்பில் எவ்விதம் சேர்த்துக்கொள்வது?" என்று தயங்கினார். அந்தக்காலத்தில் இரண்டாம்வகுப்பு என்று

சொல்வது இந்தக்காலத்து மூன்றும்வகுப்பு ஆகும். பின்னர் அவ் வாசிரியர் ஆனந்திபாயின் வேண்டுதலுக்கு இணங்கி அம்மையாரை இரண்டாம்வகுப்பில் சேர்த்துக்கொண்டார்.

சின்னஞ்சிறு குழந்தைகளுக் கிடையே, இருபத்தாறு வயசுடைய நம் அம்மையார் மழித்த தலையுடன் அமர்ந்து படிக்கலாயினர். அங்கே இருந்த பெண்குழந்தைகள் நம் அம்மையாரைப் பார்த்து ஒருவகையிலே நகைப்பும், மற்றொருவகையிலே வியப்பும் கொண்டனர்.

உழைப்பிலும் ஊக்கத்திலும் குன்றாத நம் பார்வதிபாய்அம்மையார் தாம் மேற்கொண்ட கருமமே கண்ணாக இருந்து, மெய்வருந்திப் படித்து ஆண்டுதோறும் தவறாது மேல்வகுப்பு மாறிவந்தார். பெரியார் கார்வேயும் ஆனந்திபாயும் மேற்கொண்ட முயற்சியினால் நம் அம்மையார் ஆரம்பப்பள்ளியிறுதித் தேர்விலும் தேர்ந்து, போதனுமுறைப்பழக்கப் பள்ளிக்குச் செல்லுதற்குரிய நன்மதிப்புத் தாளையும் பெற்றார்.

ஆசிரியர்ஆகுதற்குரிய பழக்கப்பள்ளியில் சேர்ந்து அதற்குரிய உபகாரச்சம்பளத்தையும் நம் அம்மையார் பெறுவாராயினர். அப்போது பெரியார் கார்வே அளவிலா மகிழ்ச்சியுற்றார் ; தாம் செயற்கரிய ஒரு செயலினைச் செய்துவிட்டதாகக் கருதலாயினர். உண்மையில் அஃது ஒரு செயற்கருஞ் செயலே ஆகும். இருபத்தைந்து வயசுவரையில் எழுதப் படிக்கத் தெரியாமல் ஒரு குக்கிராமத்திலே காலங்கழித்துவந்த ஒரு கைம்பெண்ணைச் சிலஆண்டுகளில் பல பெண்மணிகளுக்குப்

பாடங் கற்பிக்கத் தக்க ஆசிரியையாக மாற்றுதல் அருஞ் செயலே அன்றோ!

பார்வதியாய் தாம் பள்ளியிலிருந்து வீடு திரும்பும் சமயமும், காரிலே பெரியார் தம் கல்லூரியிலிருந்து இல்லம் திரும்பும் சமயமும் ஏறக்குறைய ஒன்றாகவே இருந்தன. ஆதலால் அவர்கள் இருவரும் மாலைவேளைகளில் ஒன்று சேர்ந்து வரும்போது பலப்பல பொருள் குறித்து உரையாடுதற்கு நல்ல வாய்ப்பு நேர்ந்தது. அச் சமயங்களில் நம் பெரியார் கூறிவந்த பொன்மொழிகளே பார்வதியின் உள்ளத்தைப் பெரிதும் பண்படுத்தின.

இங்கிலாந்து அமெரிக்கா முதலிய நாடுகளில் உள்ள பெண்மணிகளின் வாழ்க்கைநிலையினையும், அவர்தம் முன்னேற்றச் செயல்களையும் பெரியார் கார்வே விரிவாக எடுத்து உரைப்பார்; நம் நாட்டுப் பெண்கள் பெரும்பாலோர் கல்வியறிவு சிறிதும் இன்றி, கிணற்றுத்தவளைகள் போல் இருந்து வீண்பேச்சுப் பேசிக் காலங்கழித்து வருதலையும் அவர் நம் அம்மையாருக்கு நினைப்பூட்டுவார்; கணவனை இழந்த பெண்கள் கல்வியறிவுடையோராய் இருந்தால் எவ்வளவு பொதுநலத் தொண்டுகள் புரியலாம் என்பதை மிக்க ஆர்வத்தோடு பார்வதியாருக்குப் புலப்படுத்துவார்.

நம் பெரியார் இவ்வாறெல்லாம் உரையாடி வந்த காரணத்தால் பார்வதிஅம்மையாருக்கு ஒரு புத்துணர்ச்சி பிறந்தது. அவர் தமது முன்னைய வாழ்க்கைநிலையினையும் தம் கல்வியறிவினுல் பின்னர் மாறியுள்ள தன்மையினையும் தமக்குள் எண்ணிப்பார்த்தார்; அது-

ளால் நம் நாட்டுப் பெண்களின் முன்னேற்றங் கருதி உழைத்தலே தம் வாழ்க்கையின் குறிக்கோள் ஆகத் தீர்மானித்தார் ; தம் வாழ்க்கையினை வீணிலே கழித்து வரும் இளங் கைம்பெண்கட்குத் தம்மால் ஆவன புரி-தலே பெரிய பொதுநலத்தொண்டு என்று கருதினர் ; தம் வாழ்க்கைநிலையினை முற்றிலும் மாற்றித் தம்மை நல்வழிப்படுத்திய பெரியார் கார்வேஅவர்களே தமக்-குப் பெறலருங் குருநாதர் என்று அவரை மதித்தார் ; அவர்தம் சொல்வழி நின்று பணி ஆற்றலே தமது கடன் என்று தீர்மானித்தார்.

நம் அம்மையார் ஆரம்பப் பள்ளியில் மூன்று ஆண்டுகளும் ஆசிரியத் தொழிற்பழக்கப் பள்ளியில் மூன்று ஆண்டுகளுமாக ஆறு ஆண்டுகள் ஊக்கத்தோடு கற்று ஆசிரியர் ஆதற்குரிய நிலையினை அடைந்தார். அரசாங்க உபகாரச்சம்பளம் பெற்றவர்கள் அரசாங்கச் சார்பில் நடைபெறும் பள்ளிகளுள் ஒன்றில் மூன்று ஆண்டுகளேனும் ஊழியம் செய்தல்வேண்டும். கைம்-பெண் இல்லத்திற்குப் பார்வதிஅம்மையாரின் இன்றி-யமையாமை அரசாங்கத்தாருக்குக் கூறி அத்தகைய சட்டத்திலிருந்து நம் அம்மையாரைப் பெரியார் கார்வே விடுவித்துவிட்டார்.

## அம்மையாரின் அரிய தொண்டுகள்

பார்வதிபாயைக் கல்வித்துறையில் பண்படுத்தி-வரும்போதே நம் பெரியார் கைம்பெண் இல்லம் தொடங்கியிருந்தார் என்பதை நீங்கள் முன்பே அறிந்-திருக்கிறீர்கள். அதன் வளர்ச்சிக்காகத் தம்பொருளை

சந்தாவும் அன்றி, பம்பாய், பரோடா, ஆமதாபாத் முதலிய பல இடங்களுக்கும் சென்று நம் கார்வே பெரியார் பொருள் திரட்டியும் வந்தார். அவர் அவ்விதம் முயன்று, அவ்வில்லத்திற்காகவே புனேக்கு நான்கு மைல் தொலைவில் உள்ள ஹிங்க்னி பட்ருக் (Hingne Budruk) என்னும் இடத்தில் ஒரு நிலம் வாங்கி ஒரு சிறு விடுதியைக் கட்டத் தொடங்கினார். அவ்வில்லம் கட்டிமுடிந்ததும் நம் அம்மையார் ஆசிரியராக வருவதற்கும் ஏறத்தாழக் காலம் ஒன்றாகவே இருந்தது.

அவ்வில்லம் ஆடவர்பொறுப்பில் நடந்துவருதலினும் முற்றிலும் பெண்களாலேயே நடந்துவருதல் நலம் என்று கருதி, முதலில் நம் அம்மையார்பொறுப்பிலேயே அது நன்கு நடைபெறுமாறு அதற்கு வேண்டுவன யாவும் பெரியார் கார்வே அமைத்துவைத்தார். பார்வதி அம்மையார் முதல் ஓர் ஆண்டு அவ்வில்லத்துக்கு வேண்டிய எல்லாத் தொழில்களையும் தாமே புரிந்துவந்தார்: அதன் மேற்பார்வையாளராகவும் இருந்தார்; ஆசிரியராகவும் இருந்தார். பெருக்குதல், மெழுகுதல், சோறு சமைத்தல், பாடங்கற்பித்தல் முதலியன பலவற்றையும் அவ்வம்மையாரே பார்த்துவந்தார். அப்பொழுது பதினெட்டு இளங் கைம்பெண்கள் அவ்வில்லத்தில் தங்கியிருந்து பயனடைந்துவந்தனர்.

அதற்கு அடுத்தஆண்டில் பார்வதிபாய்க்குத் துணையாகக் காசிபாய், வேணுபாய், பானுபாய் என்னும் மூன்று பெண்மணிகள் வந்து சேர்ந்தனர். ஆதலின் அவ்வில்லம் முன்னிலும் வளர்ச்சியுறத் துவங்கியது.

ஆச்ரமம் வளர்ச்சிக்கு ஏற்றவண்ணம் பொருள் வருவா-யும் பெரிது வேண்டியிருந்தது. பெரியார் கார்வே வழக்கம்போல் பல இடங்களுக்கும் சென்று பொருள் திரட்டி வருவாராயினர்.

ஒருமுறை நம் பெரியார் பொருள் திரட்டுதற்காக ஒரு மாட்டுவண்டியில் பயணஞ் செய்யும்போது எதிர்-பாராத தன்மையில் அவ் வண்டி கவிழ, அவருக்குப் பெரிதும் ஊறு நேர்ந்தது. அதன்காரணமாக அவர் சில நாட்கள்வரையில் படுக்கையிலேயே கிடக்கவேண்டிய-வரானர். அப்போது நம் பார்வதிபாயும் மற்றும் பிற-ரும் அவருக்கு வேண்டிய உதவிகள் பலவும் புரிந்து-வந்தனர். கார்வேஅவர்கள் நாளுக்குநாள் உடல்நலம் பெற்று வந்தாராயினும் அச் சமயம் பார்வதிஅம்மை-யார் பலப்பல எண்ணலாயினர்,

" கடவுள்அருளால் நம் அண்ணு* எவ்விதமோ உயிர்பிழைத்தார். அவ்விதம் இன்றி அவர்உயிருக்குத் தீங்கு நேர்ந்திருந்தால் கைம்பெண் இல்லத்தின் நிலை என்ன ஆகும்! அவர் சென்று பொருள் தொகுத்து வாரா விடில் இவ் வில்லம் நடைபெருதன்றே ! நம் அண்ணு-வின் எண்ணமெல்லாம் அதனேடு அழிந்தேபோகும் அல்லவா !"

நம் அம்மையார் இவ்விதமெல்லாம் அப்போது நீடு நினைந்து பார்த்தார் ; கைம்பெண் இல்லம் இவ்விதம் ஒருவரையே எதிர்பார்த்து நடைபெறுதல் கூடாது

---

*தாய்வ பெரியாரைப் பலரும் அண்ணு என்றே அழைப்பர்.

என்று எண்ணினர்; யாருக்கு எத்தகைய இடையூறு நேரினும் அவ் வில்லம் இனிதே நடைபெறுதற்கு முதற்பொருள் பெரிதும் வேண்டும் என்றும் பொருள் தொகுப்போரும் பலர் முன்வரல்வேண்டும் என்றும் கருதினர். இல்லத்தைக் கவனித்துக்கொள்ளுதற்குப் போதிய பெண்மணிகள் இருந்ததனல், தாமும் பல இடங்கட்குச் சென்று பொருள் தொகுக்க முயலுதல் கூடும் என்று நம் அம்மையார் அப்போது முடிவு செய்தார்.


நம் பெரியார் சில நாட்களில் எழுந்து நடையாடத் தொடங்கினர். அப்போது பார்வதிஅம்மையார் தம் எண்ணத்தைக் கார்வேபெரியாரிடம் தெரிவித்தார். அம்மையாரின் கருத்து நம் பெரியாருக்கும் உடன்பாடா-கவே இருந்தது. ஆயின், பார்வதிஅம்மையாருக்கு எங்கே சென்று எவ்விதம் பொருள் திரட்டுவது என்பது சிறிதும் தெரியாது. அவ்விதம் இருந்தும், கைம்-பெண்கள் முன்னேற்றத்திலே இருந்த உணர்ச்சி மிகுதியினல் அவர் அத் தொழிலினை மேற்கொள்ளத் துணிந்தார்.

தாம் பொருள் தொகுக்கும்போது தம்மால் பொருட்செலவு பெரிதும் நேரிடுதல் கூடாதென்று அம்மையார் எண்ணினர். கைம்பெண் இல்லத்துக்கு வரும் பெண்மணிகளுள் ஓர் அம்மையாருக்குப் புகை-வண்டி இலவசச் சீட்டு (Railway Pass) இருந்தது. அப் பெண்மணியார் ஓர் ஏவலாளையும் அழைத்துப் போக அதில் அனுமதி இருந்தது. இவ் வுதவியின் மூலம்


சில இடங்களுக்குச் சென்று பொருள் திரட்டலாம் என்று பார்வதிபாய் தீர்மானித்தார். ஆனால், அவ்விதம் புறப்பட முயலும்போது எதிர்பாராத ஓர் இடையூறு நேரலாயிற்று.

பார்வதிபாயின் மைந்தராய நாராயணருக்குத் திடுமெனக் காய்ச்சல் கண்டது. அந்தக் காய்ச்சல் நம் அம்மையார் புறப்படுவதற்குள் 104° அளவுக்கு வெப்பங் கொண்டு வீசியது. தம் அருமைமைந்தர் அத்தகைய நிலையில் இருந்தபோது அம் மைந்தரை விட்டுச் செல்ல அம்மையாருக்கு எவ்விதம் உள்ளம் துணியும்? ஆதலால் அப்போது அவர் பெரிதும் தயக்கம் உற்றார்.

பொதுநலத்திலே ஈடுபடுவோர்க்கு எத்தகைய பற்றும் இருத்தல்கூடாது என்பது பெரியார் கார்வே அவர்தம் கருத்து. ஆதலால், அப்போது அவர் நம் அம்மையாரை நோக்கி, “பார்வதி, நீ இங்கே இருப்பதனால் உன் மைந்தன் அடையக்கூடிய நன்மை என்ன? அவன்நோயினை உன்னால் வாங்கிக்கொள்ள முடியுமா? நாம் ஒரு நன்மை புரியத் துவங்கும்போதுதான் நமக்குப் பல இடையூறு வந்துசேரும். பொதுநலத் தொண்டர்கள் அப்போது உள்ளம் தளராமல் உறுதியாக இருத்தல் வேண்டும். ஆதலால் நீ சிறிதும் தயங்காமல் புறப்படு. இங்கே உள்ள வேணுபாயும், காசிபாயும் உன்னினும் பன்மடங்கு கருத்தாக இருந்து உன் மகனைக் கவனித்துக்கொள்ளுவார்கள்” என்பனபோன்ற பலப்பல அறிவுரை கூறி அவ் வம்மையாரைத் தேற்றிப் பொருள் திரட்ட அனுப்பினர்.



கைட்டேண் இல்லம் (1908).



குடும்பக் கலைப் பயிற்சி வகுப்பு

(Domestic Science Class)

கார்வே பெரியாரின் மொழியைக் கடவுள்கட்டளையாகக் கொண்டு அவ் வம்மையார் பொருள் திரட்டப் புறப்பட்டார்.

நம் பார்வதி அம்மையார் முதலில் ஓர் ஊருக்குச் சென்று அங்கே இருந்த பேர்பெற்ற பெரியோர் சிலரைக் கண்டு, ஒரு கூட்டம் கூட்டவேண்டும் என்றும், கைம்மைஇல்லத்தைக்குறித்தும் அதற்கு வேண்டிய உதவிகளைக்குறித்தும் தாம் அக் கூட்டத்தில் சிறிது விளக்கிக் கூற விருப்பம் என்றும் தெரிவித்தார். ஆனால் அவர்களுள் எவரும் அம்மையார்சொல்லுக்குச் சிறிதும் மதிப்பைத் தரவில்லை. அவர்களுள் சிலர் "என்ன, நீயா சொற்பொழிவு செய்யப் போகின்றாய்!" என்று வெறுப்புத் தோன்ற வினவினர். "ஒரு பெண்பிள்ளை, அதிலும் கைம்பெண். அவள் பேசுவது! நாம் கேட்டுக்கொண்டிருப்பதா!" என்பதே அவர்கள்எண்ணம்.

இறுதியில், பயிர்த்தொழில் செய்து வாழ்ந்துவந்த ஓர் அன்பரை அந்த அம்மையார் கண்டு தம் எண்ணத்தைத் தெரிவித்தார். அதற்கு அவர், 'மாலைவேளைகளில் இங்கே என் நண்பர் சிலர் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்ள வருவர். அப்போது வேண்டுமானால் நீங்கள் அவர்களிடம் உங்கள் எண்ணத்தைத் தெரிவிக்கலாம்!' என்றார்; நம் அம்மையார் அவ்விதமே அங்கே தங்கியிருந்தார். அந்த அன்பர் கூறியவண்ணம் அவர் நண்பர்களுட் சிலர் அங்கே வந்து சேர்ந்தனர். ஏறத்தாழப் பத்துப் பன்னிருவர் இருந்தனர். பார்வதி அம்மையார் தமது சொற்பொழிவைத் துவங்கினார்.

அந்த அன்பர்கள் தம்மீது சினங் கொள்வார்களோ என்று அம்மையார் முதலில் பெரிதும் அஞ்சினர். அவர்கள் பொறுமையோடு கேட்பதை அறிந்து, நம் அம்மையார் தைரியமாகவே உணர்ச்சி ததும்பத் தமக்குத் தோன்றியவைகளையும் கார்வே பெரியாரிடம் கேட்டவைகளையும் கலந்து கைம்பெண் இல்லம் காரணமாகத் தமது *கன்னிச் சொற்பொழிவை நிகழ்த்தினர். நம் நாட்டுக் கைம்பெண்களின் நிலைமையினையும், நம் நாட்டிலே கைம்பெண் இல்லம் ஒன்று இருக்கவேண்டிய அவசியத்தினையும் நம் அம்மையாரின் சொற்பொழிவால் அவர்கள் ஒரு சிறிது உணரலாயினர். ஆதலால் அந்த அன்பர்கள் அவ் இல்லவளர்ச்சிக்காகப் பதின்மூன்று ரூபாய் மகிழ்வுடன் உதவினர்.

நம் பார்வதிபாய் முதன்முதலாகப் பெற்ற அந்தப் பதின்மூன்று ரூபாய்களைக் கண்டு பெரிதும் உள்ளம் உவந்தார். அந்தச் சிறு தொகை நம் அம்மையாருக்கு அப்போது 130 ரூபாய்களாகத் தோன்றியது. பிறகு நம் அம்மையார் இந்தூர் என்னும் இடத்துக்குச் சென்றார். அங்கேயும் உயர்ந்த பதவியில் இருந்தவர்கள் உதவ முன் வரவில்லை. ஆதலால் பார்வதிபாய் அங்கே இருந்த கல்லூரிக்குச் சென்று சில மாணக்கர்களிடம் தம் எண்ணத்தைத் தெரிவித்தார். அவர்கள் நம் அம்மையாரின் உயர்ந்த நோக்கத்தை உணர்ந்து உடனே ஒரு கூட்டத்தைக் கூட்டிவைத்தனர். பார்வதி அம்மையார் அப்போது சொற்பொழிவு நிகழ்த்தியதன் காரணமாக

---

* கன்னிச்சொற்பொழிவு-முதன்முதலாகப் பேசுஞ் சொற்பொழிவு.

அங்கிருந்த மாணாக்கர் பலர்க்கும் உள்ளக்கிளர்ச்சி உண்டாக, அவர்கள் பல இடங்கட்கும் சென்று நூறு ரூபாய்கள் சேர்த்து அம்மையாருக்கு உதவினர்.

பிறகு நம் அம்மையார் அங்கிருந்தோரிடம் அறிமுகக் கடிதம் பெற்று வேலூர் ஊருக்குச் சென்றார். அங்கே பெரிய கூட்டம் ஒன்றில் சொற்பொழிவாற்றி நானூறு ரூபாய்களை நம் அம்மையார் பெற்றார். இங்ஙனம் முதன்முறையிலேயே நம் அம்மையார் 500 ரூபாய்களுக்கு அதிகமாகப் பெற்று வந்ததைக் கண்டு பெரியார் கார்வே பெரிதும் மகிழ்ச்சியுற்றார். அன்றுமுதல் பொருள் திரட்டும் பணியே நம் அம்மையாருக்கு முதன்மைப் பணியாக மாறிவிட்டது.

பிறகு நம் பார்வதிபாய் டில்லி, ஆக்ரா முதலிய பல இடங்களுக்கும் சென்றார்; தெற்கு, வடக்கு, கிழக்கு முதலிய பல திசைகளிலும் சென்றார்; தமிழ்நாடு ஆந்திர நாடு முதலிய இடங்களுக்கும் சென்று மொழிபெயர்ப்போர் உதவிகொண்டு சொற்பொழிவுகள் ஆற்றி அவ்விடங்களிலும் பொருள் தொகுத்து வந்தார். ஆகவே நம் அம்மையாரால் கைம்பெண் இல்லத்துக்கு ஆண்டுதோறும் மூவாயிரம் நாலாயிரம் ரூபாய்கள் கிடைத்துவரலாயின.

இவ்விதம் பொருள் திரட்டச் செல்லும்போது நம் அம்மையார் ஆங்கிலக்கல்வியின் அவசியத்தை உணர்ந்தார். நம் நாட்டில் பல இடங்களில் தெருக்களின் பெயர், வீடுகளின் பெயர், புகைவண்டி நிலையங்களின் பெயர் யாவும் ஆங்கிலத்திலே எழுதப்பட்டிருப்பது

கண்டு பார்வதிஅம்மையார் பெரிதும் இடருற்றார். ஆங்கிலமும் அறிந்திருப்பின் நோக்கம் மிகவும் எளிதில் நிறைவேறும் என்பதை அம்மையார் உணர்ந்தார். பெரியார் கார்வேஅவர்களும் அம்மையாரின் கருத்தை ஆதரித்தார். ஆதலால் பார்வதிஅம்மையார் தமக்கு ஓழிவு நேர்ந்தபோதெல்லாம் ஆங்கிலம் கற்க முயன்றுவந்தார்.

கைம்பெண் இல்லத்தில் ஆசிரியர்பதவி ஏற்ற அன்றே நம் அம்மையார் ஆங்கிலம் கற்கத் துவங்கினார். ஆனால் கவலை மிகுதியால் அவ் வெண்ணம் தடையுற்றது. பிறகு பொருள் தேடத் துவங்கும்போது நேர்ந்த இடர்ப்பாடுகளை நினைத்து, மீண்டும் ஆங்கிலம் கற்கத் துவங்கினார். அப்போதும் அவ் வெண்ணம் சரிவர நிறைவேறவில்லை. இவ்விதம் பல முறை முயன்றும் அவ்வெண்ணம் கைகூடாமற் போகவே, தம் வேலைகளையெல்லாம் அறவே நிறுத்திவைத்தேனும் ஆங்கிலம் கற்கவேண்டுமென்று அம்மையார் தீர்மானித்தார். அப்போது அவருக்குச் சுமார் நாற்பத்து நான்கு வயது இருக்கும்.

'சட்டைக்காரர் என வழங்கப் பெறும் ஆங்கிலோ-இந்தியர்பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள பள்ளியில் சென்று படித்தால் மிக எளிதில் ஆங்கிலம் பேசவும் எழுதவும் தெரிந்துவிடும்' என்று சிலர் கூற, அவ்விதமே அத்தகைய பள்ளியில் சென்று படிக்க நம் அம்மையார் விழைந்தார். உணவுவிடுதி அமையப் பெற்றதும் கிறிஸ்துவக்கன்னிகைகளால் நடத்தப்பட்டதுமான ஒரு

பள்ளியில், பெரியார் கார்வேயின் முயற்சியினால் நம் பார்வதிபாய் போய்ச் சேர்ந்தார். வயது முதிர்ந்த நம் அம்மையாரைச் சின்னஞ் சிறு குழந்தைகளோடு ஒன்று சேர்த்து அவர்கள் எவ்விதம் பாடம் கற்பிப்பார்கள்! ஆதலால் நம் அம்மையருக்காகத் தனிப்பட்ட முறையில் அவர்கள் பாடம் கற்பிக்கத் துவங்கினர். அதனால் பெரிதும் பயன் ஏற்படாமையால் அந்தப் பள்ளியை-விட்டு, அதே நகரில் நடைபெற்ற வேறொரு பள்ளியில் நம் அம்மையார் போய்ச் சேர்ந்தார். அங்கேயும் நம் அம்மையார் அச் சிறுகுழந்தைகளுடன் சேர்ந்து படிப்ப-பதற்கில்லை. ஆயினும் அவ் வகுப்பிலேயே ஒரு தனி-மையான இடத்தில் நம் அம்மையாரை அவர்கள் அமர்த்தினர். நம் அம்மையாருக்கு அங்கே நடை-பெறும் பாடங்களுள் ஒரு சிறிதும் விளங்கவில்லை. முத-லிலே பல மாதங்கள் வரையில் அவள் ஒரு பதுமைபோல் உட்கார்ந்திருந்தாள். பின்னரே ஒரு சிறிது விளங்க-லாயிற்று. இவ்விதம் சுமார் மூன்று ஆண்டுகள் கழித்-தும், நம் அம்மையாருக்குப் போதிய ஆங்கிலக் கல்விப்-பயிற்சி உண்டாகவில்லை. இம் முயற்சி ஒருபுறம் இருப்ப, இதற்கிடையிலே மற்றும் பல அரிய செயல்-களையும் நம் அம்மையார் நிகழ்த்திவருவாராயினர்.

## பலப்பல நிகழ்ச்சிகள்

நம் பார்வதிபாய் பல இடங்களுக்கும் சென்று பொருள் சேர்த்துவருவதோடுநில்லாமல் ஆங்காங்கே உள்ள கைம்பெண்களின் நிலைமையினையும் கூர்ந்து கவனித்துவந்தார். நம் அம்மையாரை ஒரு வகையிலே

சீர்திருத்தக்குழுவினருள் சேர்க்கலாம். எனினும், அவர்களைப்போல் அவ்வளவு முற்போக்கில் அவர் செல்லுவதில்லை. ஒருமுறை பம்பாயில் சீர்திருத்தமகாநாடு ஒன்று நடந்தது. அதில் நம் அம்மையாருக்கும் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அவர், "இக்காலத்தில் படித்த பெண்கள் பலர் எதற்கும் மேல்நாட்டினரின் பழக்க வழக்கங்களையே பின்பற்றுகின்றனர். ஆடையைக் குறித்த வகையில் அவர்களைப் பின்தொடர்வது பெரிதும் தவறு" என்று அவர்களையே கண்டித்துக் கூறினார். எனினும், மிக்க தீவிரமான சில சீர்திருத்தக்காரர்கள் தவிர, மற்றையோர் அனைவரும் அம்மையார் கூறியதே உண்மை என்று கூறினர். கைம்பெண்இல்லத்துக்குப் பொருள் தொகுப்பதற்காக அங்கே இருந்த இளைஞர்கள் பலர் தங்கள் தொப்பிகளைக் கழற்றிக்கொண்டு பலரிடமும் சென்று பொருள் பெற்று வந்து பார்வதிஅம்மையாரிடம் கொடுத்தனர். அந்தப் பொருளும் [illegible]டக்கூடிய தொகையாகவே இருந்தது.

கைம்பெண்கள் தலைமழித்துக்கொள்ளும் பழக்கத்தை நம் அம்மையார் அறவே வெறுத்தார்; "மனுதருமசாஸ்திரத்தைத்தவிர வேறு எங்கும் அது கூறப்படவில்லையே !" என்று நம் அம்மையார் தாம் செல்லும் இடங்களில்எல்லாம் கூறினார். ஆனால் அவர்மட்டும் மழித்த தலையினராயே இருந்துவந்தார். தம் புதல்வருக்குத் தக்க வயசு வந்து, தம் தாயார் சொல்வது நியாயமானதே என்று அறிகிறவரையில் அவ்விதம் தலைமழித்திருக்க வேண்டும் என்று அவர் எண்ணினார்

கைம்பெண்கள் சிறிதும் கல்வியறிவில்லாமல வீணே காலம் கழிப்பதை விட்டுச் சிறிது கல்வியறிவு பெற்றுப் பொதுப்பணிகளிலே ஈடுபடுதல்வேண்டும் என்பதை நம் அம்மையார் தாம் செல்லும் இடங்களி-லெல்லாம் கூறிவருவார். ஆனால், சில பெண்கள் எல்-லாவகைகளிலும் ஆண்களுக்குச் சமமாக இருத்தல் வேண்டும் என்று விரும்புவதை அவர் ஏற்றுக் கொள்வ தில்லை.

இவ்விதம் நம் அம்மையார் பலப்பல இடங்களுக்-கும் சென்று சொற்பொழிவாற்றிப் பொருள் தொ-குத்து வரும்போது, கார்வே பெரியார் 'இதுவே போ-தும்' என்று வாளா இருந்துவிடவில்லை. அவர், நம் அம்-மையாரால் செல்ல இயலாத பல இடங்களுக்குச் சென்று பெரிதும் பாடுபட்டுப் பொருள் தொகுத்து-வந்தார். பார்வதி அம்மையார் தொகுக்கும் பொருள் கைம்பெண் இல்ல நிகழ்ச்சிகட்கும், பெரியார் கார்வே தொகுக்கும் பொருள் அவ்வில்லவளர்ச்சிக்கும் பெரிதும் பயன்பட்டன என்று கூறுதல் பொருந்தும்.

பார்வதிபாய் பொருள் திரட்டத் துவங்கிய நான்-கைந்து ஆண்டுகளுக்குள் கைம்பெண் இல்லம் பெரிதும் வளர்ச்சி பெற்றுவிட்டது. அவ் வில்லத்திலிருந்து பல பெண்மணிகள் முன்னேற்ற முறலாயினர். சிலர் கல்வி கற்றுப் பொதுநலங்களில் ஈடுபடலாயினர். சிலர் மறு-மணம் புரிந்து வாழ்க்கை நடத்தலாயினர். சிலர் தம் இல்லத்தில் இருந்து தம் குடும்பத்தினருக்குப் பெரிதும் பயனுடையவராயினர். இவைகளைக் கண்ட பொது-

மக்களுக்கு அவ் வில்லத்தின்மீது மதிப்பு அதிகரித்தது. பலர் அன்போடு பொருளுதவ முன்வந்தனர். அவ்வில்ல நிகழ்ச்சிகளைக் காண மக்கள் பலரும் விழைந்தனர். அதிலிருந்து அவ் வில்லம் பொதுமக்களுக்கு ஒரு காட்சிசாலையாகவும் இருந்துவருகிறது.

நம் நாட்டுப் பெண்கள் முன்னேற்ற முறுதற்கு இத்தகைய இரண்டொரு சிறுசெயல்கள் மட்டும் போதா என்று நம் பெரியார் எண்ணினார்; தங்கள் நல்வாழ்வைச் சிறிதும் நோக்காமல் தங்கள் உடல், பொருள், உயிர் ஆகிய இம்மூன்றனையும் இழத்தற்கும் துணிவு கொண்டுள்ள தொண்டர்கள் ஒரு சிலரேனும் ஒன்று கூடி உழைத்தால்தான் நம் நாட்டுப் பெண்கள் சிறிதாயினும் முன்னேற்றம் உறுவர் என்று பெரியார் கார்வே முடிவுகட்டினார். அதற்காக நம் பெரியார் 'நிஷ்காம கர்ம மடம்' (தன்னலங்கருதாது உழைப்பவர் நிலையம்) என்னும் பெயருடன் ஒரு கழகம் நிறுவ எண்ணினார். அக்கழகத்தில் பெரியார் சிறியார் என்னும் வேறுபாடு இல்லை. அக்கழகத்தில் சேருபவர்கள் தாழ்வெனுந்தன்மையோடு தொண்டு புரிதல் வேண்டும். இந்தக் குணநலம் வருதற்காக அவர்கள் முதலில் இல்லந்தோறும் சென்று பிச்சை ஏற்றுப் பழகுதல்வேண்டும். அவ்விதம் ஏற்பதனால் வரும் பொருளே அக் கழகத்தின் முதற்பொருளாகும். அக் கழகத்தில் ஆடவர் மகளிர் ஆகிய இருபாலருக்கும் இடம் உண்டு.

இத்தகைய கொள்கையோடு 1908-ஆம் ஆண்டு நம் பெரியார் அக் கழகத்தை நிறுவினார். அக் கழகத்தில்

சேர்வோர் முதலில் செய்யவேண்டிய உறுதிமொழி வருமாறு;

"படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய யாவும் வல்ல இறைவன் திருமுன்பு நின்று நான் கூறும் உறுதி-மொழிகளாவன: நம் நாட்டுப் பெண்களின் முன்னேற்-றத்துக்கு இப்போது புரியவேண்டிய செயல்களுக்காக நான் என்னையே இக்கழகத்துக்கு முற்றிலும் உரிமை-யாக்கி விடுகின்றேன். இன்றுமுதல் நான் என் வாழ்க்-கையின் நலத்தைக்குறித்துச் சிறிதும் கவலை கொள்ள மாட்டேன். இக்கழகம் என்னை எத்தகைய தொண்டு-களுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். என் உயிர்-வாழ்க்கைக்கும் என் குடும்ப நடைமுறைகட்கும் இக் கழகம் என்ன தொகை தருகின்றதோ அதனை நான் ஏற்றுக்கொண்டு உழைக்கத் துணிவுகொண்டிருக்-கிறேன். இது முற்றிலும் உண்மை, உண்மை."

ஏறத்தாழ இத்தகைய தன்மையிலேயே அவ்வுறுதி மொழி அமைந்துள்ளது. முதலில் நம் பெரியார் கார்வே அக் கழகத்தினர் முன்னிலையில் உறுதிமொழி கூறினார். பின்னர் அங்கே கூடியிருந்த மற்றையோர்களும் அவ்-விதமே உறுதிமொழி கூறினர். அங்கே கூடியிருந்தவர்-கள் பத்துப்பன்னிருவருக்குமேல் இல்லை. நம் பார்வதிபாயும் அவர்தம் அருமைமைந்தரும் அக்-குழுவினைச் சார்ந்தவரேயாவர். நம் பெரியார் எவரையும் வற்புறுத்தவில்லை. நம் அம்மையாரும் அவர்தம் புதல்வர் நாராயணரும் அவர்களாகவே முன் வந்து வலிய உறுதி-மொழி கூறினர். நாராயணர் அப்போது கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார். அவர், தம் உறுதிமொழிப்-படியே எம். ஏ. பட்டம் பெற்றும் எத்தகைய உயர்ந்த

4

உத்தியோகத்தையும் கருதாமல் அக் கழகத்தினரின் கட்டளைப்படியே ஒழுகலாயினர்.

அக் கழகத்தினர் உறுதி வாய்ந்த உள்ளத்தோடு உழைத்து 'மஹிலாவித்தியாலயம்' (பெண்கள் கல்வி நிலையம்) என்று மற்றுமோர் கல்விநிலையம் தொடங்கினர். திருமணம் செய்துகொள்ளாத பெண்களும், இளமையிலே திருமணம் செய்துகொண்டு இல்லத்திலே வீண்காலம் போக்கிவரும் பெண்களும் இந்த நிலையத்தில் சேர்ந்து கல்விகற்கலாயினர். அக் கழகத்தினர் இந்நிலையத்துக்காகவும் பெரிதும் பாடுபட்டு மிக்க விரைவில் அறுபதினாயிரம் ரூபாய் மதிப்புள்ள ஒரு பெரிய கட்டடத்தையும் கட்டிமுடித்தனர். ஆகவே, அக் கழகத்தினர் கைம்பெண் இல்லம், பெண்கள்நிலையம் ஆகிய இரண்டினையும் மிகச்சிறப்பாக நடத்திவரலாயினர். அதன்பின்னர், அவர்கள் மற்றுமோர் அரிய செயலினையும் ஆற்றியிருக்கின்றனர். அதுவே 'பெண்கள் பல்கலைக் கழகம்' என்பது. பெண்களுக்கென ஒரு தனிப் பல்கலைக் கழகம் இவ்வுலகத்திலே அருமையெனில், அத்தகைய ஒரு பெரும்பணியினை யேற்று வெற்றிகரமாக நடத்திவரும் அக் குழுவினரை எவர்தாம் போற்றாமல் இருப்பர்!

இந்தப் பல்கலைக்கழகச்சார்பில் நடைபெறும் பெண்கல்லூரியில் நம் நாராயணஅதவலே பேராசிரியராய் அமர்ந்தார். 1927-ஆம் ஆண்டில் அவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. கோவாநகரிலே நம் பார்வதிபாய் வாழ்ந்துவந்தபோது பாஸ்கரஜோஷி இரமாபாய் என்பவர்களுடன் ஒருகுடும்பமாகஇருந்து வாழ்ந்துவந்தாரல்லவா! அந்த இரமாபாய்புதல்வியாரே நாரா-

உத்தியோகத்தையும் கருதாமல் அக் கழகத்தினரின் கட்டளைப்படியே ஒழுகலாயினர்.

அக் கழகத்தினர் உறுதி வாய்ந்த உள்ளத்தோடு உழைத்து 'மஹிலாவித்தியாலயம்' (பெண்கள் கல்வி நிலையம்) என்று மற்றுமோர் கல்விநிலையம் தொடங்கினர். திருமணம் செய்துகொள்ளாத பெண்களும், இளமையிலே திருமணம் செய்துகொண்டு இல்லத்திலே வீண்காலம் போக்கிவரும் பெண்களும் இந்த நிலையத்தில் சேர்ந்து கல்விகற்கலாயினர். அக் கழகத்தினர் இந்தநிலையத்துக்காகவும் பெரிதும் பாடுபட்டு மிக்க விரைவில் அறுபதினாயிரம் ரூபாய் மதிப்புள்ள ஒரு பெரிய கட்டடத்தையும் கட்டிமுடித்தனர். ஆகவே, அக் கழகத்தினர் கைம்பெண் இல்லம், பெண்கள்நிலையம் ஆகிய இரண்டினையும் மிகச்சிறப்பாக நடத்திவரலாயினர். அதன்பின்னர், அவர்கள் மற்றுமோர் அரிய செயலினையும் ஆற்றியிருக்கின்றனர். அதுவே 'பெண்கள் பல்கலைக் கழகம்' என்பது. பெண்களுக்கென ஒரு தனிப் பல்கலைக் கழகம் இவ்வுலகத்திலே அருமையெனில், அத்தகைய ஒரு பெரும்பணியினை யேற்று வெற்றிகரமாக நடத்திவரும் அக் குழுவினரை எவர்தாம் போற்றாமல் இருப்பர்!

இந்தப் பல்கலைக்கழகச்சார்பில் நடைபெறும் பெண்கல்லூரியில் நம் நாராயணஅதவலே பேராசிரியராய் அமர்ந்தார். 1927-ஆம் ஆண்டில் அவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. கோவாநகரிலே நம் பார்வதிபாய் வாழ்ந்துவந்தபோது பாஸ்கரஜோஷி இரமாபாய் என்பவர்களுடன் ஒருகுடும்பமாகஇருந்து வாழ்ந்துவந்தாரல்லவா! அந்த இரமாபாய்புதல்வியாரே நாரா

யண அதவலேயினுக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்தார். திருமணம் நிகழும்போது நம் நாராயண அதவலேயிற்கு இருபத்தேழு வயசு; மணமகளாருக்கு இருபத்தொரு வயசு. அந்த அம்மையார் மெற்றிகுலேஷன் வகுப்புவரையில ஆங்கிலமொழிப் பள்ளியில் படித்தவர்; இல்வாழ்க்கைக்குரிய பலகுணங்களும் வாய்ந்தவர். இவைகளையெல்லாம் நன்கு உணர்ந்தே பார்வதிபாய் தம் புதல்வருக்கு அவ்வம்மையாரை வாழ்க்கைத் துணைவியாராகத் தேர்ந்தெடுத்தார்.

பார்வதிஅம்மையார் தம் அருமைமைந்தரை உயர்ந்த கல்வி பயில்வித்தார்; அவருக்கு நல்லொழுக்கத்தைக் கற்பித்தார்; அந்த மைந்தரைப் பொதுநலப்பணியிலும் ஈடுபடுத்தினார்; அவரின் தகுதிக்கு ஏற்ப ஒரு சிறந்த வாழ்க்கைத்துணைவியையும் தேடி அமைத்தார்; இவை ஒருபுறம் நிகழ்ந்துவர, தமக்குரிய பொதுநலப்பணிகளிலும் ஈடுபட்டுவந்தார்; அப் பணிகளில் பெண்கள்முன்னேற்றமே நம்நாட்டுக்கு இக்காலத்தில் இன்றியமையாதது என்று எண்ணினார்; அதிலும் இளங்கைம்பெண்களின் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துதலே முதன்மையானது என்று கருதினார். இத்தகைய பணிகளுக்காகவே நம் அம்மையார் ஆயுள்ஊழியர்கழகமாகிய நிஷ்காமகர்ம மடத்தில் சேர்ந்து உறுதிமொழியும் செய்தார்; அவ்விதமே இரவும்பகலும் பாடுபட்டார்.

நம் அம்மையார் இனி ஓய்வுகொள்ளலாமல்லவா? ஆனால், அவர் அவ்விதம் எண்ணவேஇல்லை. நம் பெரியாரும் ஓய்வுகொள்ளவில்லை. அப்போதுதான் அவர்

பெரிதும் பாடுபட முயன்ருர். பார்வதி அம்மையார் தமக்குப் பெரிதும் இன்றியமையாதென எண்ணிய ஆங்கிலக் கல்வியை மேலும் வளர்த்துக்கொள்ள முயன்ருர். நம் அம்மையார் அதன்பொருட்டுப் பல பள்ளிகளிலே சென்று முயன்ற வரலாற்றை நீங்கள் முன்னரே அறிந்திருக்கிறீர்கள். அவ்விதமெல்லாம் முயன்றும் அவர்எண்ணம் ஈடேறவில்லை.

அதனுல் பெரியார் கார்வே நெடிது நினைந்து பார்வதிஅம்மையாரை விளித்து, "நீ அமெரிக்காவிற்குப் போனுல் அங்கே பகலில் வேலைசெய்துகொண்டு இரவிற்படிக்கலாம் ; அவர்களோடு பேசிப் பழகலாம். அவ்வாருயின், ஆங்கிலத்தில் எளிதில் தேர்ச்சி பெறலாம்" என்று கூறி உடன்படுவித்து, பயணச்செலவுக்கு வேண்டும் பொருளும் கொடுத்தார். இது பலருக்கு உடன்பாடாயில்லையாயினும் நம்அம்மையார் கார்வே அவர்கள்சொற்படி பயணத்துக்குச் சித்தமானுர்.

## அம்மையார் அயல் நாடு சென்றது

நாற்பத்தெட்டாம் வயசு நிகழும் நிலைமையில் உள்ள நம் அம்மையார், மேல்நாட்டுப்பழக்க வழக்கங்கள் ஒருசிறிதும் உணரப்பெருத நம் அம்மையார், தன்னந்தனியராக 1918-ஆம் ஆண்டு அமெரிக்கா செல்லப்புறப்பட்டுவிட்டார். அங்கே உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் பாலிமொழி கற்பிப்பதற்காகத் தர்மானந்தர் என்னும் அறிஞர் ஒருவரும் அப்போது அந்தக் கப்பலில் பயணம்கொண்டார். அவர் இருகுழந்தைகளையும் தம்மோடு அழைத்துச் சென்ருர். அத்தகைய ஒரு துணை

ஏற்பட்டது நம் அம்மையாருக்குப் பேராதரவாய் இருந்தது.

கப்பலில் சென்ற முதல்நாளே நம் அம்மையாருக்குப் பல துன்பங்கள் நேரலாயின. நாற்காலியில் அமர்ந்து மேசையின்மீது உணவுவைத்து அருந்தும் பழக்கம் பார்வதியாருக்குப் பொருந்தவில்லை. அவர் முள்ளையும் கத்தியையும் பார்த்துத் திகைத்தார். அங்கே மரக்கறி உணவு இல்லாமையால் ரொட்டியையும் பழத்தையுமே அவர் உட்கொள்ள வேண்டியவரானார். கப்பல் முதலில் கொழும்புத் துறைமுகத்தை அடைந்தது. பிறகு அது சிங்கப்பூர், ஹாங்காங் சென்று, முடிவில் டோக்கியோவை அடைந்தது. அங்கிருந்து அம்மையார் வேறு கப்பலில் ஏறி அமெரிக்காவுக்குப் புறப்பட்டார். கப்பற் பழக்கம் இன்மையால் அம்மையார் காய்ச்சலால் வருந்தினார். கப்பல்மருத்துவர்உதவியால் அந்தக் காய்ச்சல் ஒருவாறு நீங்கியது.

கப்பலில் செல்லச்செல்லக் குளிர் அதிகரிக்கத்தொடங்கியது. தாம் குளிர்நாட்டுக்குச் செல்லுதலை அமமையார் சிறிதும் உணர்ந்துகொள்ளாமலே புறப்பட்டுவிட்டார். கோயில் குளங்களுக்குச் செல்லுபவர்போல் பார்வதியார் பட்டுப்புடைவைகளோடு பயணங்கொண்டார். ஆதலால் அவர் அமெரிக்காவில் ஸான்பிரான்சிஸ்கோ துறைமுகத்தை விட்டு ஊரை அடைந்தவுடனே குளிர்காய்ச்சலால் பெரிதும் துன்புற்றார். அம்மையாரால் அடியெடுத்து வைக்கவும் இயலவில்லை. தர்மானந்தரோ குறித்த ஒருகாலத்திற் கல்லூரிக்குச் செல்லவேண்டியவர். ஆதலால் அவர் அங்கே உள்ள

கிறிஸ்துவக்கன்னிகையர்மடம் ஒன்றில் அம்மையாரை விட்டுவிட்டுச் செல்ல வேண்டியவரானார். அந்த மடத்தின் தலைவியார் பார்வதியிடம் பெரிதும் அன்பு செலுத்தினார்.

காய்ச்சல் கண்ட இரண்டொருநாளிலேயே, 'பார்வதி அம்மையாரை இந்தியாவுக்கு அனுப்பிவிடலாமா' என்று அந்தக் கன்னியர் எண்ணினர். அப்போது அம்மையார் அவ்வித நிலையில் இருந்தார். பிறகு அக் காய்ச்சல் நாளுக்கு நாள் குறையத் தொடங்கியது. சிலநாட்களில் அம்மையார் உடல்நலம் பெற்றார். ஆயினும், அங்கே எவ்விதம் காலம் கழிப்பது என்பதே நம் அம்மையாருக்கும் பெரிய ஆலோசனையாய் இருந்தது.

பார்வதியாரிடமோ திரும்பிவருதற்குப் போதிய பொருள்தான் எஞ்சியிருந்தது. அந்த ஊரில் உணவுக்கும் விடுதிக்குமே பணம் பெரிதும் வேண்டும். ஆதலால், அவர் அங்கே ஏதாவது ஒருதொழிலினைச் செய்து காலங்கழிக்க எண்ணினார்.

அந்த நாட்டின் பழக்க வழக்கங்கள் தெரிந்தவர்களுக்கே அங்கே உள்ள இல்லங்களில் குற்றேவல் புரிய இயலும். ஒன்றும் அறியாத நம்அம்மையார் அங்கே சென்று என்ன தொழிலினைச் செய்வார்! ஆதலால், நம் பார்வதியார் அந்த மடத்தில் இருந்த வேலையாட்கள் புரிந்துவரும் வேலைகளையெல்லாம் முதலிலே கூர்ந்து கவனித்துவரலானார்; இரண்டொரு வேலைகளை அவர்களோடு தாமும் செய்து பழக முயன்றார். பிறகு அவர் ஓர் இடத்தில் வேலைக்கு அமர்ந்தார்.

இந்தியாவில் கிறிஸ்துவமதபோதனை புரிந்து பின்னர் ஓய்வுகொண்டுள்ள பெண்மணிகள் வாழும் விடுதியே நம் அம்மையாருக்கு முதலில் கிடைத்த இடம். அங்கே உணவருந்துவோரின் உண்கலங்களைக் கழுவுதலே நம்அம்மையாருக்குக் கிடைத்த முதல்வேலை. அதனோடு பலகணிகளைத் துடைத்தல், அறையைச் சுத்தம் செய்தல் முதலியனவும் அவர் புரிதல்வேண்டும்.

அங்கே நம் பார்வதியாருக்கு ஒழிவு சிறிதும் கிடைக்கவில்லை. ஒருவேளைக்கு நானூறுபீங்கான்தட்டுக்கள் கழுவுதல்வேண்டும். இதனோடு பிறவேலைகளையும் குறைவறச் செய்யவேண்டும். "இவ்விதம் இங்கே காலையும் மாலையும் இரவும் வேலை புரிந்துகொண்டே இருந்தால் நான் எவ்விதம் ஆங்கிலப்பயிற்சி பெறுவது!" என்று நம்அம்மையார் எண்ணியெண்ணி யேங்கலாயினார்.

புனாவைவிட்டுப் புறப்படும்போது பார்வதியார் ஒரு நண்பரிடமிருந்து ஓர் அறிமுகக்கடிதம் பெற்றிருந்தார். அது அப்போது நினைவிற்கு வந்தது. ஆதலால் நம் அம்மையார் அங்கிருந்துகொண்டே ஓர்கடிதத்தின் மூலமாக அந்த அன்பருக்குத் தம் துன்பநிலையினைத் தெரிவித்தார். அந்தக் கடிதம் பார்வதியாருக்குப் பெரிதும் நன்மையைச் செய்தது.

'யங் இந்தியா' என்னும் ஒரு பத்திரிகை அங்கே இந்தியரின்பொருட்டே நடைபெற்றுவந்தது. அம்மையார் அனுப்பிய கடிதத்தை அந்த அன்பர் அப் பத்திரிகையாசிரியருக்கு அனுப்பிவைத்தார். அதன் ஆசிரியராய டாக்டர் ஆர்டிகா என்பவர் உடனே நம்அம்மை-

யாரின் துன்பநிலையினைப் பல அன்பர்களுக்குத் தந்தி-மூலமாகத் தெரிவித்தார்.

ஒருநாள் பார்வதிஅம்மையார் தமது நிலையினை நினைந்து துன்புற்றவண்ணம் தாழ்வாரத்தின்கீழ் அமர்ந்-திருந்தார். அப்போது மூன்று இந்திய இளைஞர்கள் அங்கே வந்து சேர்ந்தனர். இந்தியர் என்னுஞ் சொல்-லைக் கேட்டதும் நம்அம்மையார் இன்முகம் கொண்டார். அவர்கள் மூவரும் மகாராட்டிரமொழி தெரிந்தவராய்த் தம் ஊரினராய் இருப்பதை அறிந்ததும் நம்அம்மை-யாருக்கு அளவிலா மகிழ்ச்சி பொங்கியெழுந்தது. பிர-மனும், திருமாலும், சிவனுமே இவ்விதம் உருவெடுத்து வந்தனரோ என்று ஐயுறவும் கொண்டார். அவர்கள் தம் தாய்மொழியில் பேசிய பேச்சைக் கேட்டதும் நம் அம்மையாருக்குக் காது குளிர்ந்துவிட்டது. பார்வதியார் அவர்களை அன்போடு வரவேற்று உபசரித்தார்.

அங்குக் கிறிஸ்தவ முதுமகளிர்கட்கு இளைஞர் மூவரும் பல பொய்க்காரணங்கள் கூறி, நம் பார்வதி-அம்மையாரைத் தங்கள் இடத்துக்கு அப்போதே அழைத்துக்கொண்டு போய்விட்டனர்.

பார்வதியார் அந்த மூவருக்கும் உணவு சமைத்துப் போடும் வேலையில் இருந்தார். அவர்களோடு இருப்பது அம்மையாருக்கு முதலில் நன்மையாகவே தோன்றியது. பிறகு அவர் அவ்விடத்தையும் விட்டு நீங்கவே எண்ணி-னார். அவர்கள் மூவரும் மிக எளியவாழ்க்கை நடத்து-கின்றவர்கள். பொருள்வருவாயோ மிகக் குறைவு. அவர்கட்குக் காலை மாலை முற்றிலும் வேலை. ஆங்கிலம் கற்பிக்க அவர்கட்கு ஒழிவே ஏற்படவில்லை. வீட்டிலும்

அவர்கள் தங்கள் தாய்மொழியில் பேசினர். அம்மையார் எண்ணிச் சென்ற எண்ணம் அங்கே சிறிதும் நிறைவேறுதற்கில்லை.

நியூயார்க் என்னும் நகரில் அறிஞர் கோகலே* என்பவர் ஒருவர் இருந்தார். அவர் இருப்பிடத்தை நம்அம்மையார் ஓர் அன்பர்மூலம் அறிந்தார். தம்மை அழைத்துச் சென்ற அந்த இளைஞர்களைக்கொண்டே அந்த அறிஞருக்குப் பார்வதியார் ஒருகடிதம் விடுத்தார்.

அறிஞர் கோகலே அந்தக் கடிதத்தைக் கண்டதும் நம்அம்மையாரை உடனே அங்கே வரும்படி அழைத்து அதற்கு வேண்டிய பணத்தையும் அனுப்பினார். பார்வதிஅம்மையார் தங்கியிருந்த இடத்துக்கு நெடுந் தூரத்தில் நியூயார்க் உளது. ஆறுநாள் பயணம்செய்து பலவண்டிகள் மாறி அங்கே செல்லுதல்வேண்டும். வண்டிச்செலவு ஏறத்தாழ 450 ரூபாய்கள் ஆகும்.

கோகலே அளித்த பொருளுதவிகொண்டு பார்வதி அம்மையார் நியூயார்க்குக்குப் புறப்பட்டார். வண்டிகள் மாறி ஏறுதற்குப் பெரிதும் துன்பப்பட்டார். புறப்பட்ட ஆறும்நாள் நள்ளிரவில் வண்டி நியூயார்க்கு அடைந்தது. நம்அம்மையார் 'இன்ன வண்டியில் வருகின்றேன்' என்று முன்னதாகக் கோகலேயினுக்குத் தெரிவிக்காமையால் அவர் எதிர்கொண்டழைப்பதற்கில்லை. ஆதலால் பார்வதியார் பலவிடங்களிலும் அலைந்து, முடிவில் இடங் கண்டறிந்தார்.

அறிஞர் கோகலே பார்வதிபாய்க்கு வேண்டிய உண்டி, இருப்பிடம் யாவும் தனியே அமைத்துவைத்–

---

* இவர் கோபாலகிருஷ்ண கோகலே அல்லர்.

நார். ஆயினும் பிறருக்குத் துன்பத்தைக் கொடுத்துக்-கொண்டிருக்க அம்மையார் விரும்பவில்லை. கோகலே 'வேலையின்மை' என்பது குறித்து ஒரு நூல் எழுதி அதனை அச்சிட்டுப் புத்தகவடிவில் வைத்திருந்தார். சிறிதும் விலையாகாமல் இருந்த அந்தப் புத்தகங்களை விற்றுக்கொடுத்தாவது அவருக்கு உதவிசெய்ய நம்-அம்மையார் எண்ணினர். பார்வதியார் அப்புத்தகங்-களுள் சிலவற்றை எடுத்துக்கொண்டு வீடுதோறும் சென்று விற்பனைசெய்ய முயன்றார். அவ்விதம் பெரிதும் முயன்றும் நாற்பது பிரதிகளே விற்பனையாயின. கோகலே மின்சாரத்தொழிற்கூடத்தில் ஓர் உயர்ந்த பதவியில் இருந்தார். அவரிடம் ஆங்கிலம் கற்றல் இய-லாத செயல். ஆதலின் இவை பலவும் நோக்கி, நம்-அம்மையார் தமக்கென ஓர் இடம் தேடலாயினர். புத்த-கம் விற்கத் துவங்கும்போது பார்வதிஅம்மையாருக்குப் பல இடங்கள் தெரியவந்தன. அதன்மூலம் ஒருவர்-வீட்டில் வேலையாள் தேவை என்பது அறிந்து, நம் அம்மையார் அங்கே சென்றார். அந்த வீட்டில் அவர் சுமார் ஒன்றரை மாதம் வேலைசெய்ய நேர்ந்தது. ஆயினும் அதற்குள் அவர்கள் பெரிதும் மகிழ்ந்து நம்-அம்மையாருக்கு ஒரு நன்மதிப்பிதழ் ஈந்தனர்.

அந்த நன்மதிப்பிதழ் கொண்டும், வேறு பிற இடங்களில் தொழில் புரிந்த பழக்கம் தெரிவித்தும் பார்வதிஅம்மையார் அங்கே உள்ள ஒரு பெரிய மருத்-துவச்சாலையில் பீங்கான்தட்டுக்கள் கழுவும் பணியினைப் பெற்றார். அந்த வேலைக்குச் செல்ல முயலும்போது நம் அம்மையாருக்குப் பித்தசம்பந்தமான ஒரு நோய் கண்டது. ஆயினும், அவர் அதனைப் பொருட்படுத்-

தாமல் அவ்வேலைக்குச் சென்றார். அந்தக் கட்டடத்தின் அமைப்பும் பிற ஒழுங்குகளும் பார்வதிஅம்மையாரைப் பெரிதும் வியக்கச்செய்தன. அம்மையார் அதுவரையில் அத்தகைய ஓர் அமைப்பினைக் கண்டதேயில்லை.

அங்குப் பார்வதியாருக்குக் கிடைத்த வேலை பெரிதும் துன்பமானதாகவே இருந்தது. தட்டுக்கள் கழுவுவதில் பெரிதும் பழக்கம் பெற்றவர்களும் அங்கே திணறிவிடுவார்கள். தட்டுக்களோ அளவற்றவைகள். அதனோடு அதிலிருந்து எழும் நாற்றம் நம் அம்மையாரால் சிறிதும் பொறுக்கமுடியவில்லை. பலமுறை அவர் அங்கே வாய் குமட்டலோடு வருந்தினர். அவருக்கு அப்போதிருந்த பித்தஅதிகரிப்பே அதற்கு முதற்காரணம்.

ஒருநாள் நம் அம்மையார் பெரிதும் வருந்தித் தம் தொழிலைப் புரிந்துகொண்டிருந்தபோது திடுமென மயக்கமுற்று அங்கே சாய்ந்துவிட்டார். பிறகு நிகழ்ந்த செயல் ஒன்றேனும் அம்மையாருக்குத் தெரியாது. மயக்கம் தெளிந்து நம் பார்வதியார் கண்திறந்து பார்த்தபோது, தாம் அந்த மருத்துவச்சாலையில் அங்குள்ள பிணியாளர்களுள் ஒருவராகப் படுக்கையிற் கிடத்தலை உணர்ந்தார். வேலை செய்யப் போந்த இடத்தில் தாமும் ஒரு நோயாளியாகக் கிடக்க நேர்ந்தது எண்ணி அம்மையார் பெரிது வருந்தினர். அங்கே வேலையில் இருந்த ஒரு பெண்மணியார் பார்வதியார்மீது மிக்க இரக்கம் வைத்து, ''அம்மா, உயர்ந்த குலத்தில் பிறந்த உங்களுக்கு இத்தகைய வேலைகள் சிறிதும் பொருந்தா' என்று கூறி, தமக்குத் தெரிந்த ஓர் இடத்தில் அவருக்கு வேறு வேலை தேடிக்கொடுத்தார்.

பார்வதிபாய் அம்மையார் அந்தப் பெண்மணியார் கூறிய இடத்தில் தொழில் புரியலானார். பின்னர், அவர் நியூயார்க் நகருக்குச் செல்ல நேர்ந்தது. அங்கே பல இடங்களுக்கும் சென்று முடிவில் ஓர் அயர்லாந்துப் பெண்மணியாரிடம் வேலைக்கு அமர்ந்தார். அந்தப் பெண்மணியார் நம் அம்மையார்மீது முதலில் பெரிதும் ஐயுறவு கொண்டார்; பிறகு அன்பு மிகுந்து அவரை அருமையாக நடத்திவந்தார். அவர் தம் தாய்நாட்டின்மீது பெரிதும் பற்றுள்ளவர். அதற்காக அவர் மாலை வேளைகளில் ஒரு தகரப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு தெருத் தெருவாய் அலைந்து, “அயர்லாந்து விடுதலைக்கு உதவி செய்யுங்கள்” என்று கூவி, பொருள் தொகுத்து அயர்லாந்துக்கு அனுப்புவார். அவர்செயலைக் கண்டதும், நம் அம்மையாரும் அங்கே இருந்த ஒருசிலரிடம் இந்தியக் கைம்பெண் இல்லத்தைக்குறித்துக் கூறி 25 டாலர்கள் சேர்த்தார். அதுவே நம் அம்மையார் அமெரிக்காவிலே சேர்த்த முதற்பணம்.

ஷீஹி என்னும் அந்த அயர்லாந்துநாட்டுப் பெண்மணியாரின் உதவியால் பார்வதியார் பல செய்திகளைத் தெரிந்துகொண்டார்; அந்த அம்மையாரின் தூண்டுதலினால் அங்கே உள்ள இராப்பள்ளிக்கும் சென்றுவந்தார். அங்கே இருந்தபோதுதான் ‘யங் இந்தியா’ பத்திரிகைநிலையத்துக்கும் அடிக்கடி செல்லும் வாய்ப்பு அம்மையாருக்கு நேர்ந்தது. அதுகாரணமாக மிஸ் ஓ ரெய்லி என்னும் அம்மையார் நம் பார்வதியாருக்கு அறிமுகமானார்.

வாஷிங்டன்நகரில் கைத்தொழிலாளர் மாநாடு ஒன்று கூடியது. அதற்குப் பார்வதி அம்மையாரை

வரும்படி மிஸ் ஓ ரெய்லி அழைத்தார். அம்மையாரிடம் பொருள் இன்மை அறிந்து, தாமே பொருளும் உதவிப் பார்வதியாரை அங்கே அழைத்துச்சென்றார். அந்த மாநாட்டில் நம் பார்வதியார் தம் மகாராட்டிர மொழியில் பேசினார்; ரெய்லி அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அதிலிருந்து அவர்கட்கு நட்பு அதிகரித்தது. பார்வதி அம்மையார் மிஸ் ரெய்லி வீட்டிலேயே தங்கிவிட்டார்.

மிஸ் ஓ ரெய்லி என்பவரும் அயர்லாந்து நாட்டினரே. அவர்தாயார் இளம்பருவத்திலேயே கைம்பெண் ஆகியும் வேறுமணம் செய்துகொள்ளாமலே தையல்வேலை செய்து தம் குழந்தையை வளர்த்தவர். ரெய்லிக்கு அப்போது ஐம்பத்தொரு வயது. அந்த அம்மையார் திருமணம் செய்துகொள்ளாமலேயே பொதுநலப் பணியில் ஈடுபட்டு வந்தார்; அவர்தம் வாழ்க்கைநெறி, அவர் புரியுந் தொண்டுகள் யாவும் நம் அம்மையாருக்குப் பெரிய படிப்பனையாய் இருந்தன. பார்வதியார் ரெய்லியின் தாயாரிடம் ஆங்கிலபாடம் முதலிலிருந்து ஒழுங்கு பெறக் கற்கத் துவங்கினார். ரெய்லி நம் அம்மையாரை அங்கே உள்ள பல தொழிற்சாலைகளுக்கெல்லாம் அழைத்துச் சென்று அவை நடைபெறும் முறைகளையும் விளக்கினார். ரெய்லிஅம்மையார் உதவியால் பார்வதியார் இந்தியர் வாழும் இடங்களுக்கெல்லாம் சென்று சொற்பொழிவாற்றிக் கைம்பெண் இல்லத்துக்குப் பொருள் தொகுத்தார். அதனால் சுமார் மூவாயிரம் ரூபாய்கள் சேர்ந்தன.

ஒரு கூட்டத்தில் நம் அம்மையார், கார்வே பெரியார் பொருளுக்காகத் துன்புற்று அலைந்த நிகழ்ச்சியைத் தெரிவித்தார். அப்போது ஓர் அமெரிக்கப் பெண்மணியார், 'உங்கள் பெரியார் ஏன் ஒரு மோட்டார்வண்டி வைத்துக்கொள்ளுதல் கூடாது?' என்று எழுதிக் கேட்டார். உடனே அம்மையார் அதற்குப் போதிய பொருளின்மையைத் தெரிவித்தார். அந்த அமெரிக்கப் பெண்மணிகள் அதை நினைவில் வைத்திருந்து அம்மையார் ஊருக்கு வந்த பின்னர் ஒரு மோட்டார் வண்டியை வாங்கிக் கைம்பெண் இல்லத்துக்கு அனுப்பிவைத்தனர். அந்த வண்டி இப்போதும் கைம்பெண் இல்லத்துக்குப் பயன்படடு வருகிறது.

கார்வே பெரியார் குறிப்பிட்டிருந்த காலம் நெருங்கவே, பார்வதிஅம்மையார் இந்தியாவுக்குத் திரும்ப எண்ணினார். அப்போது அவருக்கு அறிமுகமாயிருந்த அந்தப் பெண்மணிகளும் பிற இந்தியப் பெரியோர்களும் அம்மையாரை மிக்க அன்போடு வழி அனுப்பினர்.

1920-ஆம் ஆண்டில் போர் முழக்கம் அடங்கி விட்டமையால், நம் அம்மையார் இங்கிலாந்தையும் பார்க்க விழைந்தார். அங்கே புனநகரத்துக் கைம்பெண் இல்லத்துப் பெண்மணியார் மேல்நாட்டுக்கல்விக்காக வதிந்திருந்தார். அப் பெண்மணியார் பார்வதியாருக்குப் பெரிதும் துணையாக இருந்து பல இடங்களையும் காட்டினார். பார்வதிஅம்மையார் அங்கே இருந்த இந்தியரிடையே சொற்பொழி வாற்றி 20 பவுன் கைம்பெண் இல்லத்துக்குப் பெற்றார்.

பிறகு அம்மையார் பாரிஸ் சென்று அங்கு நிகழும் கல்வி முறைகளையும் கவனித்துக்கொண்டு இந்தியாவுக்குத் திரும்பினார். அப்போது அதே கப்பலிலே பெரியார் இரவீந்திரநாததாகூரும் வர, அவர்தம் நட்பையும் அம்மையார் பெற்றார். நம் அம்மையார் 1920-ஆம் ஆண்டு ஜூலை மாதம் பம்பாய்நகரம் வந்து சேர்ந்தார்.

## முடிவுரை

'பார்வதிபாய்அம்மையார் செயற்கருஞ் செயல் யாதும் புரியவில்லையே!' என்று நீங்கள் எண்ணலாம். ஆங்கிலம் சரிவரப் பேசத் தெரியாத ஓர் அம்மையார், நாற்பத்தெட்டு வயசுக்கு மேற்பட்ட ஓர் அம்மையார், தம் கையில் போதிய பொருளும் இல்லாமல், தன்னந்தனியராய், கொழும்பு, ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய பல நாடுகளுக்கும் சென்று, ஒருவகையிலே இவ் வுலகத்தையே சுற்றி வந்தார் என்றால் அது செயற்கருஞ் செயல் ஆகாதா! அதனோடு பல இடங்கட்குஞ் சென்று சொற்பொழிவாற்றி இந்தியப் பெண்மணிகளின் நிலையினை அவர்களுக்கு விளக்கி நாலாயிரத்துக்கு மேற்பட்ட ரூபாய்களும், ஒரு மோட்டார் வண்டியும் பெற்றுவந்தார் என்றால் அதை ஒரு பெரிய செயலாகக் கருதலாகாதா! அந்த அம்மையார் பல இடங்களின் பழக்க வழக்கங்களையும் கூர்ந்து கவனித்து வந்திருக்கின்றார்! பலவகைப்பட்ட கல்விமுறை, கைத்தொழில்முறை முதலியவைகளையும் ஒரு வகையில் உணர்ந்துவந்திருக்கின்றார்! தாம் அறிந்த உண்மைகளையும், தாம் புரிந்த தொண்டுகளையும்

விளக்கமாகத் தம் தாய்மொழியில் எழுதி ஒரு நூலாகவும் வெளியிட்டிருக்கின்றார். அதனைப் படித்துப் பார்த்த ஓர் அமெரிக்கஅறிஞர் பெரிதும் மகிழ்ந்து அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளிப்படுத்தியும் இருக்கின்றார்.

நம் அம்மையார் இதுகாறும் தொகுத்த பொருள் இலட்சம் ரூபாய்கள் இருக்கலாம் என்று கைம்பெண்-இல்லத்தினரே தமது ஆண்டறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர். நம் அம்மையார் இந்த முதுமைப்பருவத்திலும் சில தொண்டுகள் புரிந்து வருகின்றார்.

நம் பார்வதிபாய் அதவலே நீடு வாழ்க.

கைம்பெண் இல்லம் ஓங்குக.